தென்மொழி

தமிழீழம் வாழ்க !

தங்கத் தாயகம் தமிழீழம் வாழ்க!
தமிழர்கள் உரிமையால் தழைத்தின்பம் சூழ்க!
பொங்கிய உணர்வினுல் பூத்தது நாடு!
புதுமையும் நலன்களும் பொலிந்ததெம் வீடு!

ஊமைகள் பேசினர்; ஒழிந்ததிங் கடிமை!
உன்மத்தம் தொலைந்தது; ஓய்ந்தது மிடிமை!
ஆமைகள் எழுந்தன! ஆர்த்தன புலிகள்!
அயலவர் ஆட்சி அகன்றது நாட்டில்! (தங்கத்)

ஒற்றுமை மலர்ந்தது; உரிமைகள் கண்டோம்!
ஒழிந்தன பிளவுகள்! உறவுகள் கொண்டோம்!
வெற்றி முரசங்கள் விண்வெளி தோயும்!
வீரச் சுடரொளி நிலமெங்கும் பாயும்! (தங்கத்)

சுவடி : 21
ஓலை : 8

ஆசிரியர்
பெருஞ்சித்திரனர்

விலை
1-25 உருபா

Scanned with CamScanner

நமக்கு வந்த மடல்கள்.

0: 1079: பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு! வணக்கம். பாவாணரின் 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி' வெளியீடு பற்றிய செய்தியை ஏற்கனவே செய்தித்தாளில் படித்து அறிந்திருந்தாலும், தென்மொழி, மீனம் இதழில் (சுவடி-21, ஓலை 6) அதன் உண்மை நிலைகளை அறிந்த பின்பு, நெஞ்சம் கலங்குகின்றது. வான்முட்டி நிற்கும் மலையை மறைத்துவிட்டு, மண்ணாங்கட்டிகள் விளம்பரமும், ஆதாயமும் பெற்றுவிட்டன. பாவாணரின் அருமை - பெருமைகளில் குன்றிமணியளவும் அறிந்திராத மூங்கைகள், ஏதோ தாமே முயற்சி செய்து செ. சொ. பி. அகரமுதலியை வெளிக்கொணர்ந்தது போல் காட்டிக் கொண்டதை எப்படி ஐயா பொறுப்பது?

திராவிட இயக்கத் தலைவர்களில் யாராயினும் ஒருவர் பாவாணரின் அரும்பணி பற்றி அவர் காலத்தில் ஓர் அரை வரி எந்த மேடையிலாவது, ஒருமுறையேனும் பேசியிருப்பாரா? செ. சொ. பி. அகரமுதலி என்ற சொல்லாவது, அவர்தம் வாயிலிருந்து உதிர்ந்துதானிருக்குமா? பாவாணருக்குத் தகுந்த ஆளுதவியோ, பிற ஏந்துகளோ எதுவும் செய்து கொடுக்காமலிருந்து விட்டு, இறுதியில் உலகத் தமிழ் மாநாட்டில் அவரை வீண் மனம் நோகடித்து, உயிர்விடச் செய்ததன்றி, வேறு என்ன செய்து விட்டார்கள்? தங்களைத் திட்டமிட்டுப் புறக்கணித்ததற்கும் சேர்த்து உள்ளுக்குள் அல்லவா மகிழ்ந்து கொண்டார்கள்.

'தென்மொழி' இல்லாவிடில் எம்போன்ற இளைஞர்கள் பாவாணரை எங்ஙனம் அறிவோம்? வரலாற்றில் அவர் முற்றிலும் அல்லவா மறைக்கப்பட்டிருப்பார். பாவாணர் தமது 'தமிழர் வரலாறு' என்னும் நூலில் தங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதே தகுதி சான்ற வரலாற்று உண்மையன்றோ?

ஓங்கி முழங்கும் பெரு நெருப்பை, துணியிட்டு மூடி மறைத்துவிட்டதாக அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். காலம் உண்மையை உணர்த்தும். இனி, தாங்கள் காலத் தாழ்த்தம் செய்யாமல் எப்பாடு பட்டேனும் பாவாணரின் வாழ்க்கை வரலாற்றை எழுதி முடித்து வெளியிட்டு விடவேண்டும். அதன் வழி 'தென்மொழி'-யின் மெய்ப்பணிகளும் தமிழக அரசின், இயக்குநரின் செய்ந்நன்றி கொன்ற புன்மையும் மக்களிடையே தெளிவாகும்.

— இங்ஙனம், உ.த.மு.க. தொண்டன், வள்ளிகேள்வன், ஈரோடு.

0: 1080: பெருமதிப்பிற்குரிய பாவலரேறு அவர்களுக்கு, வணக்கம்! (சு. 21; ஓ. 6) நேற்றுத்தான் 'தென்மொழி' இதழ் கண்டேன். அதில் இவ்வெளியேனின் 'அடைக்கல அன்னை புகழ்' நூலுக்குத் தாங்கள் வெளியிட்டிருக்கும் நூல் நிறைக்கு என் நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாங்கள் சுட்டிக்காட்டியிருக்கும் பிழைகளைச் செய்துவிட்டமைக்காக வருந்துகிறேன். சுட்டிக்காட்டிய தங்கள் கடமையுணர்வுக்கும் பொறுப்பான ஆசிரியத் தகைமைக்கும் என் தலைதாழ்ந்த வணக்கம்!

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

தமிழ நெஞ்சே!

பனியும்,மா மழையும், பட்டப்
　　பகல்,இராப் பொழுதும் ஓடித்
தனியனுய் அலைந்தாய்; சொன்னுய்!
　　தணல்போல எழுதித் தீர்த்தாய்!
கனியுமா றில்லை; நம்மோர்
　　கருத்தறி புலனும் இல்லை!
இனியுமா விடியும் என்றே
　　எண்ணுவாய், தமிழ நெஞ்சே!

மன்னுமாத் தமிழும் வாழ்வும்
　　மறைந்துள வரலா றெல்லாம்
உன்னுமா றெம்ம வர்க்கே
　　உணர்த்தினும் கொள்வா ரில்லை!
தின்னுமா றுறங்கு மாறு
　　திரிகின்ற தமிழர் கூட்டம்
இன்னுமா எழுமென் றிங்கே
　　இருக்கின்றுய், தமிழ நெஞ்சே!

மாண்ட,மா நாக ரீகம்
　　மன்னிய பண்பா டெல்லாம்
தூண்டுமா றுணர்வுச் சொல்லால்
　　துலக்கிடக் கால்நூற் றுண்டாய்
வேண்டுமா றுணர்த்தி விட்டாய்!
　　விளைவொன்றும் கண்டா யில்லை!
மீண்டுமா உழைப்ப தற்கே
　　வீறுவாய், தமிழ நெஞ்சே!

ஞாலமா மாந்தர்க் கெல்லாம்
　　நல்லொளி பரப்பி, ஓசை
மூலமா நின்ற நந்தாய்
　　மொழிப்புலம் விளங்கக் காட்டி
ஏலுமா றுரைத்தாய்! ஆனுல்
　　ஏற்பதற் காரிங் குள்ளார்?
மேலுமா தொண்டு செய்ய
　　மீறுவாய், தமிழ நெஞ்சே!

பொதுமுறைக் கொள்கை சாற்றிப்
　　புலத்தினை மீட்ப தற்குப்
புதுநலக் கருத்தைச் சொன்னுய்!
　　பொய்ம்மையென் றுனைஉ ரைத்து
முதுகினில் குத்து கின்றுர்!
　　முகத்தினில் உமிழு கின்றுர்!
இதன்மேலும் விளைவுக் கென்றே
　　ஏங்குவாய், தமிழ நெஞ்சே!

குழைவரும் கூடு வாரும்
கும்பிட்டு வணங்கி அன்பில்
இழைவரு மாகப் பல்லோர்
எதிர்வந்த கால மெல்லாம்
பிழைவரும் என்றெண் ணுமல்
பேசினே! நெகிழ்ந்தார்! இன்னும்
மழைவரும் பொழியும் என்றே
மயங்குவாய், தமிழ நெஞ்சே!

மனைக்கென மக்கட் கென்ன
மனம்அலை யாமல், முற்றும்
வினைக்கென எழுந்த போது
விலகினர்; வேருய்ப் போனர்!
நினைக்கவும் செய்ய வும்,நீ
ஒருவனே நின்ற போதும்
தினைக்கதிர் பனையாம் என்றே
நினைத்தாயா, தமிழ நெஞ்சே!

அவிகொளும் இரைக்கும், பொன்னின்
அணிகட்கும் மனைக்கும் உள்ளம்
தவிகொளும் அலையும் கூட்டம்
தமிழ்கொளும் உணர்வில் ஒன்றாய்க்
குவிகொளும் கொள்கை கொள்ளும்
கூர்ப்புரை என்றே ஓர்நாள்
செவிகொளும், எழும்,செய்ம் — என்றே
தேம்புவாய், தமிழ நெஞ்சே!

அரத்தமும் மாறி, எண்ண
ஆழமும் குறைந்து, தக்கை
மரத்தினில் செய்த பாவை
மாந்தரை எழுப்பிப் போக்கு,
வரத்தினில் வீர ராக்கும்
மந்திரப் பாடஞ் செய்யும்
உரத்தினில் உழன்று கொண்டா
உயிர்க்கின்றாய், தமிழ நெஞ்சே!

துலங்கட்டும் தமிழும் வாழ்வும்
துய்க்கட்டும் உரிமை என்றே,
குலங்கெட்டு நினைவும் கெட்டுக்
குழிக்குப்போய் மண்ணும் தின்று
புலங்கெட்ட தமிழ்க்கூட் டத்தைப்
புதுக்கவா இதுநாள் மட்டும்
நலங்கெட்டு வாழ்வும் கெட்டு
நலிகின்றாய், தமிழ நெஞ்சே!

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[திருவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை,-முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி. ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசு. ஆர். பிரான்சிசு, தென்மொழி கா. இளமுருகன்

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி:21] ௨0௧௬ விடை (மே-சூன்-85) [ஓலை-8

பொதுவுணர்வுகளில் தமிழர்கள்!



தமிழர்களின் பொதுவுணர்வு மிகவும் குறைந்து வருகிறது. தம் தாய்மொழியாகிய தமிழின் பெருமையை இன்னும் இவர்கள் சரியாக உணர முடியாதவர்களாக உள்ளனர். அதன் அடிப்படையில் இருக்க வேண்டிய தமிழின உணர்வும், தமிழ் நாட்டுணர்வும் இவர்களிடம் அறவே இல்லாமல் இருக்கின்றன. எதையும் பொதுநல நோக்கோடும், நாட்டு நல உணர்வோடும் சிந்தித்துப் பார்க்கின்ற மனப்பான்மை வெகுவாகக் குறைந்து வருகிறது; முழுவதும் தந்நலத்திற்காகவே அவர்கள் இயங்குகின்றார்கள். இவர்களிடையே தமிழர் என்னும் இனவுணர்வு மங்கிப்போய், சாதிப்பித்து தலைதூக்கி வருகிறது. தந்நல நோக்கம்

கொண்ட நடுத்தரச் செல்வர்கள் இச் சாதிவெறியைத் தூண்டி, அவரவர் சாதிகளிடையே ஆளுமைபெற விரும்புகிறார்கள். அவர்களால் அரசியலில் நுழைந்து, தங்கள் சாய்கால்களை வளர்த்துக் கொள்ளவோ, பிற பொதுநலத் தொண்டு இயக்கங்களில் பங்கு கொண்டு, தங்கள் பண நாட்டத்தை நிறைவேற்றிக்கொள்ளவோ முடியாத நிலையில், இத்தகைய சாதிவெறியை புகை மூட்டமிட்டுப் பழுத்துக் கனிய வைக்க முயற்சி செய்கிறார்கள்.

தமிழ இளைஞர்கள், தாய்மொழிப் பற்றற்றவர்களாக முற்றும் தங்களை ஆங்கில வேட்கைக்கும், அமெரிக்க,ஐரோப்பிய நாகரிகங்களுக்கும்,கட்டற்ற நடைமுறைப் பண்பாடுகளுக்கும் ஈடுபடுத்தி அடிமைப்பட்டுப் போகிறார்கள். கல்வித்துறையில் இவர்களின் நாட்டம் குறைந்து வருகிறது. பெரும்பாலும் முழு நாளையும் இவர்கள் கலை, காமப் பொழுது போக்குகளிலும், புதுமை விளையாட்டுகளிலுமே கழிக்க விரும்புகிறார்கள். பெற்றோர்களையும், பெரியோர்களையும் பொதுமதிப்புச் செய்வதும் பின்பற்றுவதும் இவர்களிடம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. காதல் களியாட்டங்களிலும், மது, சூதுகளிலும், சண்டை, சச்சரவுகளிலும் இவர்களின் ஈடுபாட்டுணர்வு மிகுந்து வருகிறது. ஆடவ இளைஞர்களுக்கும் பெண் இளைஞர்களுக்கும் இவ்வகையில் சிறு சிறு வேறுபாடுகளே இருந்து வருகின்றன. தங்களின் தனி ஒழுக்கச் சிந்தனைகளைத் தவிர்த்துக் கொண்டு, சிறு சிறு குழுக்களாகவோ கூட்டங்களாகவோ இவர்கள் இயங்க விரும்புகின்றனர். இதன் விளைவால் இவர்களிடம் இருக்க வேண்டிய கலையுணர்வுகள், விரமுனைப்புகள், கொள்கை நோக்குகள், வெற்றி இலக்குகள் மிக வேகமாகக் குறைந்து வருகின்றன. தமிழ்மொழியை இவர்கள் அறவே விரும்புவதில்லை. அதில் பேசுவதையும் இழிவு, இழுக்கு, நாகரிகமற்ற நிலை என்று கருதும் போக்குகள் இற்றை இளைஞர்களிடம் மிகுந்து வருகின்றன. இவர்களுக்குத் தமிழில் பேச சரளமாக வருவதில்லை. தமிழ்மொழியைத் திக்கித் திக்கியோ, தவறாகவோ, கொச்சையாகவோ, பிறமொழிகளை மிகுதியும் கலந்தோதான் அவர்களால் பேச முடிகிறது. இவர்கள் தங்கள் பெற்றோர்களிடம்கூட தாய்மொழியான தமிழில் பேச முற்படுவதில்லை. தங்களுக்குப் பிறர் கூறுகின்ற நல்லுரைகளையோ, அறிவுரைகளையோ, இவர்கள் கொஞ்சமும் பொருட்படுத்துவதில்லை. தங்கள் தங்கள் விருப்பப்படியே நடந்துகொள்ள விரும்புகிறார்கள். அதைத்தான் அறிவு, முன்னேற்றம் என்றும், உரிமை வளர்ச்சி என்றும் தவறாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இன உணர்வு என்பது இவர்களிடம் மருந்துக்கும் இல்லை. மாறாக, சாதி உணர்வு இவர்களிடம் ஆழமாகவோ, மேலோட்டமாகவோ வேரூன்றி இருக்கிறது. இவர்கள் தம் பெற்றோர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள விரும்புவதும் இந்தச் சாதியுணர்வையும், அவர்கள் இவர்களுக்காகச் சேர்த்து வைத்திருக்கும் சொத்துக்களையுந்தாம்! நம் நாடு முன்பிருந்த நிலை, இப்பொழுது அடிமைப்பட்டுக்கிடக்கும் நிலை, அதன் வரலாற்று மேம்பாடுகள், அவற்றின் வீழ்ச்சிகள் ஆகியவை பற்றியெல்லாம் இவர்களுக்கு ஒன்றுமே தெரிவதில்லை; அவற்றைப் பற்றி இவர்கள் தெரிந்துகொள்ள விரும்புவதும் இல்லை. பெரும்பாலும் இவர்க

ளின் கல்விக் காலத்தின் முக்காற்பகுதியை வெறும் பொழுது போக்குகளிலேயும், வெட்டிப் பேச்சுகளிலுமே வீணாக்கி வருகிருர்கள். ஆழமான உணர்வுகள் இவர்களிடம் எப்போதும் எதிலும் இருப்பதில்லை மேலோட்டமான கொறித்தல் உணர்வுகளே இவர்களிடம் குடிகொண்டுள்ளன. அறிவுக்கும் மனவுணர்வுக்கும் ஊற்றமான செய்திகளை இவர்கள் காதுகளிலேயே போட்டுக் கொள்ள விரும்புவதில்லை. இவர்களது எதிர்காலம் உறுதியற்றதாகவும் ஒரு நோக்கமும் அற்றதாகவுமே உள்ளது.

ஆசிரியர்கள், பேராசிரியர்கள் ஆகியோரிடமிருந்து இளைஞர்கள் கற்றுக்கொள்வதெல்லாம், இவர்களின் வாழ்க்கைக்கு உதவாத வெறும் மேம்போக்கான உணர்வுகளே! இவர்களின் பேராசிரியர்களும் பெரும்பாலும் இவர்களைப் போன்ற உணர்வுடையவர்களே! இவர்களுக்குத் தமிழ்மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள், வெறும் தொழிலுணர்வு அடிப்படையிலேயே அதை இவர்களுக்குக் கற்பிக்கிருர்கள். அவர்களுக்கும் தமிழ்மொழியைப் பற்றிய உண்மை வரலாருே, சிறப்பியல்களோ தெரியா. சரியான தமிழ்மொழி அறிவையும் இவர்களில் மிகப் பலர் கொண்டிருப்பதில்லை. தமிழ் மொழியைப்பற்றிய இலக்கணத்திலோ, இலக்கியங்களிலோ இவர்களுக்கு ஆழமான பயிற்சியிருப்பதில்லை. தமிழ்மொழியைப் பயிற்றுவிப்பதில், இப் பேராசிரியர்கள் ஏதோ மூன்றுந்தர, நான்காம்தர ஊழியர்களாகவே செயல்படுகிருர்கள். இன்னும், மொழியாசிரியர் சிலர்க்குத் தமிழ்மொழியறிவைத் தவிர வேறென்றும் தெரியாது. சிலர்க்கு வெறும் இலக்கியங்கள் மட்டுமே தெரியும். அதுவும் இவர்களுக்குத் தெரிந்துள்ள இலக்கியங்கள் 'புராண' இலக்கியங்களே! அவற்றில் போதுமான அறிவு வளர்ச்சிக்கோ வாழ்க்கைக் கூறுகளுக்கோ இடமிருப்பதில்லை. எப்படியேனும் தாங்கள் கற்ற தமிழ்மொழி அறிவை வைத்துக் கொண்டு, பிற அறிவியல் படித்த பேராசிரியர்களைப் போலவோ, பிற அதிகாரிகளைப் போலவோ, அல்லது வாழ்க்கையில் மிக மேம்பட்டு விளங்கும் பிற அரசியல் தலைவர்களைப் போலவோ, திரைப்படக் கலைஞர்களைப் போலவோ, பொருளியலிலும் வாழ்வியலிலும் வளம் பெறத் துடிக்கிருர்கள். அந்த ஆசையால், இவர்கள், தாங்கள் மொழியாசிரியர்கள் என்பதை மறந்து, தங்களின் தாய்மொழியான தமிழை எந்த அளவுக்கும் கீழ்மைப்படுத்தவும் தாழ்த்தவும் என்றும் தயங்குவதில்லை. தமிழ்ப் பேராசிரியராக உள்ள ஒரு சிலர், தாங்கள் ஏதோ ஓரளவு அறிவியல் படித்த காரணத்தால், தமிழ்மொழிச் சீர்திருத்தக்காரர்களாகத் தங்களை அறிமுகப் படுத்திக் கொண்டு, அதன் எழுத்துகளையும், மொழி நிலைகளையும், இலக்கண மரபு நிலைகளையும், பல்வேறு வகைகளில், தங்கள் மனம் போனவாறு சிதைக்கத் தொடங்கிச் செயல்பட்டு வருகிருர்கள். இவர்களில் சில பண்டை வீங்கிகள் எவரையும் பொருட் படுத்தாமல், தமிழ்மொழி எழுத்துகளை அளவுக்கு மீறிச் சிதைத் துச் சீரழிக்கிருர்கள். இவர்களுக்கு உண்மையான தமிழ்ப்பற்றும் இருப்பதில்லை; தமிழினப் பற்றும் இல்லை. தமிழ்நாடு முன்னேற வேண்டும் என்னும் எண்ணம் ஒரு சிறு அளவிலும் இவர்களுக்கு இல்லை. எவ்வாறேனும் தாங்கள் முன்னேறினுல் போதும் என்று

Scanned with CamScanner

எண்ணியே கரவாகச் செயல்பட்டு வருகிறார்கள். இவர்கள் தங்கள் குழந்தைகளை ஏதோ ஐரோப்பிய நாட்டுக் குழந்தைகளைப் போலவே நடை, உடை, பழக்கங்களில் வளர்த்தெடுக்கிறார்கள். தமிழ்மொழியைச் சிதைக்கின்ற பிறமொழியாளர்களை விட, இவர்கள் அதிகமாக இம்மொழிக்குத் தீங்கு செய்கிறார்கள்.

இனி, தமிழ்நாட்டில் உள்ள இயக்கங்களைப் பற்றியோ, அவற்றின் தலைவர்களைப் பற்றியோ நினைக்கவே முடியவில்லை. அவர்களின் முழுநோக்கமே தந்நலந்தான். எங்கேனும் தந்நலமற்ற தமிழ்த்தலைவர்கள் ஒருசிலர், தமிழ்மொழிக்கும், இனத்துக்கும், நாட்டுக்கும் உண்மையாகப் பாடுபடுகிற நோக்கத்துடன் இருப்பார்களானால் அவர்கள் எங்கோ ஒரு மூலையில் அடங்கிக் கிடக்கிறார்கள்; அல்லது அடக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு விடுகிறார்கள். அவர்களை எவரும் மதிப்பதில்லை. அவர்களின் திறப்பாடுகளை எவரும் வெளிக்கொணர்வதில்லை. அவர்களின் இலக்கிய ஆக்கங்களையோ, தமிழ்மொழித் தொண்டையோ, எவரும் பாராட்டுவதுமில்லை; பயன்படுத்திக் கொள்வதுமில்லை. தமிழ்த் தலைவர்கள் என்பவர்களோ, தமிழினத்தலைவர்கள் என்பவர்களோ எவரும் இவர்கள் பக்கம் தலைவைத்தும் படுப்பதில்லை. அவர்களுக்கு இவ்வொன்றுமறியாத, அடிமைப்பட்டுக்கிடக்கும் பேதைத்தமிழர்களை எவ்வாறு தங்கள் தந்நலவெறிக்குப் பயன்படுத்திக் கொள்வது, தங்கள் பொருளாசைகளை அவர்களைக் கொண்டு, எப்படி நிறைவேற்றிக் கொள்வது, எவ்வாறு தங்களுக்கும் தங்கள் தலைமுறையினர்க்கும் சொத்துகள் சேர்ப்பது என்பவற்றிலேயே, அவர்கள் முழுக்கவனமும் ஒன்றித்துப் போகிறது. அரசியல் என்பது அவர்களின் முழுநேர ஆடுகளமாகி விட்டது. காலத்துக்கேற்ப, இடத்துக் கேற்ப, சூழலுக்கேற்ப, தங்கள் அரசியல் நடவடிக்கைகளை மாற்றி மாற்றி அமைத்துக்கொண்டு, அவர்கள் ஆடிவரும் கண்ணீர் நாடகங்களில், தமிழ்நாட்டு மக்கள் மிகக் கவர்ச்சி கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கேற்பத் தங்கள் நாடகக் கதைகளை அவ்வப்பொழுது மாற்றி, மாற்றி, ஆடிக் காட்டிப், பொது மக்களின் கவனம், தங்களை விட்டு வேறுபக்கம் திரும்பிவிடாதபடி கண்காணித்துக் கொள்கிறார்கள். பேசுவதில் இவர்கள் மிகவும் சூரர்கள்! நடிப்பதில் இவர்கள் வல்லாண்மை வீரர்கள்!

அரசியல் என்பது வெறும் அரசியலுக்காகவே இங்கு நடத்தப் படுகிறது. மக்கள் பயனுக்காக அரசியல் என்பதெல்லாம் மலையேறி வெறும் பகல் கனவாகப் போய்விட்டது. படிப்பதும், படித்துவிட்டு வேலை தேடுவதும், பின்னர் தேடிய வேலையைத் திறம்படச் செய்து, வாழ்க்கை நடத்துக்கான செல்வத்தைத் தேடுவதும் என்பனவெல்லாம், அரசியல் வாழ்க்கை வலுப்பெற்ற பின் வேண்டாத மாயத் தேவியற் கதைகளாகப் போய்விட்டன. இப்பொழுது படிக்காமலும், ஒரு தொழிலில் பயிற்சிபெறாமலும், பணங்கொழிக்கும் செல்வச் சுரங்கமாக அரசியல் துறை விளங்குவதால், ஆண்களெனப் பிறந்த அத்தனை மக்களும், ஏன் பெண்களும்கூட, மீசையும் பேச்சும் முளைத்துக் கருக்கூடும் முன்னரே, அரசியலில் கொட்டைபோடத் தொடங்கிவிடுகின்றனர். வேறு பிறவகையான உடலுழைப்பு, அறிவுழைப்புத் தொடர்பான

Scanned with CamScanner

அனைத்துத் துறைகளுமே, வேண்டாத வெறுக்கத் தகுந்த, அவ்வாறு விரும்பினாலும், முன்னேற வாய்ப்புக் குறைந்த ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட துறைகளாகப் போய்விட்டன. பொது மக்களுக்குப் பெருந்தொடர்பான வாழ்வியல் துறைகளாக அரசியலும், கலையியலும் கொடிகட்டிப் பறக்கின்றன. எழுந்தால் அரசியல், விழுந்தால் கலைத்துறை அஃதாவது திரைப்படத்துறை என்னும் அளவில் தமிழ்நாடே ஏன் இந்தியாவே மாறி வருகின்றது?

அரசியல் நிலையை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி நிலையும் இக்கால் சீர்கெட்டே கிடப்பதை எவரும் மறுக்கமுடியாது. தமிழர்களிலும் அதிகாரிகளாக வரப் பெற்றவர்களிடை, தமிழ்ப் பற்றோ, தமிழினப் பற்றோ, இயல்பாக இருக்கவேண்டிய பொது நலஉணர்வோ இல்லாமல் இருப்பது பெரிதும் வருந்தத்தக்கது. தமிழர்களில் அதிகாரிகளாக இருப்பவர்கள் தங்கள் இனம் மேம்பட்டு வரவேண்டும் என்னும் எண்ணங் கொண்டவர்களாக இல்லை. தங்களின் கீழ்ப் பணியாற்றும் தமிழினத்தவரிடம் உள்ளன்பு கொண்டவர்களாக நடந்துக் கொள்வதில்லை. ஏதோ அவர்கள் வேற்றினத்தவர்களைப் போலவே அவர்களைக் கருதி வெறுக்கின்றனர்; விரட்டுகின்றனர்; இன்னுஞ் சொன்னால் இரக்கமில்லாமல் அவர்களுக்குத் தீங்கிழைக்கின்றனர். கரடி, புலி, நாய்களைப்போல் கடுமையாக விழுந்து பிடுங்குகின்றனர். அவர்களிடம் இனவுணர்வோ, பொதுவுணர்வோ துளியும் இருப்பதில்லை. ஒரு மலையாளியோ, தெலுங்கரோ, அல்லது ஒரு வடநாட்டுக்காரரோ, தம் இன மக்களிடம் காட்டும் பரிவுகளைத் தமிழின அதிகாரிகள், தமிழின ஊழியர்களிடம் காட்டுவதில்லை. ஏனோ தெரியவில்லை, தமிழர்கள் தங்கள் இனத்தவரையே வெறுக்கிறார்கள்; தங்கள் இனத்தவரையே தாழ்த்துகிறார்கள்; வீழ்த்துகிறார்கள். அதில் வெற்றி பெற்று மகிழ்கிறார்கள்.

அரசியல் வலிமை பெற்று ஆட்சிக்கு வந்தவர்களும் சரி, வருபவர்களும் சரி, ஏதோ தாங்கள் கிடைத்தற்கரிய ஒரு வாய்ப்பைப் பெற்றுத் தங்களுடைய திறமையால் அவ்விடத்துக்கு வந்தவர்களைப் போலத் தங்களை அளவுக்கு மீறிக் கருதிக்கொண்டு, செருக்கும்-தருக்கும் மிக்கவர்களாகவே, பொதுநலவுணர்வு கொஞ்சமும் இன்றிச் செயல்பட்டுத் தங்கள் நலன்களையும் - வளங்களையும் பெருக்கிக் கொள்வதிலேயே மிகவும் கண்ணும் - கருத்துமாக நடந்துக் கொள்கின்றனர். அவர்களின் ஆட்சிக் காலத்தில், தமிழ் மொழிக்கென்றும், தமிழ் இனத்துக்கென்றும், ஏதோ அங்கொன்றும்-இங்கொன்றுமாகச் செய்துவிட்டு, அவற்றையே தம்பட்டமடித்து விளம்பரப் படுத்திக் கொள்கின்றனர். இவர்கள் செய்யும் ஓரிரண்டு நலன்களை, ஏதோ இவர்கள் தங்கள் முன்னோர்களின் சொத்துக்களைக் கொண்டு செய்தவர்கள் போலவும், தங்கள் உழைப்பினால் வந்த ஊதியங்களைக் கொண்டு, செய்தவர்கள் போலவும் பீற்றிக்கொள்வது, மிகவும் அருவருக்கத் தக்கதாக உள்ளது. இவர்களுக்கு மக்கள்மேல் துளியும் அன்பிருப்பதில்லை, அவர்களின் முன்னேற்றங்களில் உண்மையாகவே அக்கறை யிருப்பதில்லை.

என்னவோ, தங்களின் முழுப் பொதுநல உணர்வாலும் இரக்கத்தாலும் செய்ததுபோல், அவர்கள் மக்களிடம் கவர்ச்சியான உரைகளாலும் விளம்பரங்களாலும் அவர்களின் நடவடிக்கைகளுக்கு விளக்கம் கூறி, மக்களைத் தம்மேல் நம்பிக்கைக் கொள்ளும்படி செய்து கொள்கின்றார்கள். இனி, தமிழ்நாட்டில் உள்ள கலைஞர்களோ, முழுத் தந்நலவெறியர்களாகவும், முழுக் கயவர்களாகவும் நடந்துக்கொள்வதை மிகக்கவலையுடன் குறிப்பிட்டாக வேண்டியுள்ளது. கலைத்துறை என்றாலே திரைப்படத் துறை என்று பொருள்படும்படி, அத்தனைக் கலைத்துறையாளர்களும் அங்கேயே மண்டிக்கிடப்பது காலத்தின் கோளாறு என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. அதில் ஈடுபட்டு,மதிமயங்கிக் கிடக்கும் பாடலாசிரியர்களானாலும், இசையாசிரியர்களானாலும், நடிகர்களானாலும் கருவியியல், நாடகவியல், கலைஞர்களானாலும், கதை, உரையாடல் எழுதும் எழுத்தாளர்களானாலும், அவர்களுக்குத் தமிழ் மொழிப்பற்றும் இருப்பதில்லை. தாயினப் பற்றும் இல்லை. இவ் வினம் ஒரு சிறு அளவிலாவது தங்களால் முன்னேறவேண்டும், என்ற ஆர்வமோ - அக்கறையோ அவர்களுக்கு அறவே இல்லை. தங்கள் கூத்தடிப்புகளுக்கேற்ற கொம்மாளங்களும், அவற்றுக்கும் மீறிய பொருள் வருவாயும் இருந்தால் போதும். மொழியோ, இனமோ, பொது மக்களோ, நாடோ எக்கேடு கெட்டால் நமக்கென்ன என்னும் கொள்ளையடிப்பு மனப்பான்மையுடனே தான் இயங்குகின்றார்கள்.

இனி, இவர்களுக்கெல்லாம் மேலாக இங்குள்ள செய்தித் தாள்களும் கலை, அறிவியல் இதழ்களும், பொது நலனில் வழிப்பறிக் கொள்ளைக் கூடங்களாகவே நடந்துக் கொள்கின்றன. திரைப்பட விளம்பரக் குவியல்களுக்கிடையே, பொது மக்கள் நலங்கருதிய ஓரிரண்டு செய்திகளை வெளியிட்டால் போதுமென்பதே அவர்களின் திட்டமான கருத்தாக இருக்கிறது. விலை மகள்களைப்போல் நடந்துகொள்ளும் இவர்களிடம் தமிழ்மொழி நலனையோ, இன முன்னேற்றத்தையோ எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? இவ்வாறாக, விளையவேண்டிய நாற்றங்கால்களில் எருமைக்கூட்டம் புகுந்து உழப்பும் நிலையில் உள்ள நம் அருந்தமிழ் மொழியும், இனமும், எதிர்கால உரிமைக் கனவுகளில் மூழ்கியிருக்கும் நாடும், எப்படித்தான் தப்பிநின்று, நாம் மீட்டெடுக்கும் கொள்கைகாலத்தை நோக்கி நடையிடப் போகின்றனவோ; அஃது நம்மை உருவாக்கி; வெளிப்படுத்தி, வழிநடத்திக் கொண்டிருக்கும் இயற்கை அன்னைக்கே வெளிச்சம்! அதுவரை நாம் நம்கடமைகளை விருப்பு-வெறுப்பு, மனச்சோர்வும் இன்றிச் செய்து கொண்டிருப்பதுதான் நமக்கிட்ட கட்டளையாகக் கொள்ளவேண்டும்! —பெருஞ்சித்திரனார்.

ஓர் அறிவிப்பு!

இவ்விதழ் அட்டை மூன்றும் பக்கத்தின் நமக்கு வந்த மடலின் 1083-ஆம் மடல் இடமின்மையால் இப் பக்கத்தில் (8 ஆம் பக்கத்தில்) தொடரமுடியவில்லை. அம் மடல் சுவடி 21, ஓலை 9-இல் தொடர்ந்து வரும் எனத் தெரிவித்துக்கொள்கிறோம்.—அமைச்சர்

பெருஞ்சித்திரனார் போர்க்கொடியைத் தூக்கிவிட்டார் !

கன்னித் தமிழ்த்தாயைக் காக்கும் எனதருமைச்
சின்னஞ் சிறுமிகளே! செல்வமெனுந் தம்பிகளே!
முன்னைக் குமரியிலே முக்கழக மேடையிலே
பன்னூல் தனைஆய்ந்து பைந்தமிழாள் வாழ்ந்தவகை!
இந்நாள் சுவடிகளோ எடுத்தியம்பும் உண்மைநிலை,
கண்டு வியக்கின்றோம்; கண்ணீர் விடுகின்றோம் !
உண்டு பிழைப்பதற்கே ஓடிவந்த பார்ப்பனியர்
என்றும் நமதருகில் இருந்தே கருவறுக்கும்
தொண்டு புரிகின்றார்; சூதறியா நந்தமிழர்
அண்டித் தலைவணங்கும் அவலநிலைக் குள்ளாகி
ஒன்றும் புரியாமல் ஒதுங்கிவிட்டா ரந்தோகாண்!

காலம் சுழன்றுவிட்ட காலம்! தமிழ்மீட்க
வாளெடுத்த 'பாவாணர்' வழிவந்த 'சித்திரனார்''
சூளுரைத்துப் போர்க்கொடியைத் தூக்கிவிட்டார்
வீரம் பிறந்திடவே வெற்றி குவித்திடவே! [தமிழ்நிலத்தில்!
சீராய்த் தமிழ்ச்சிட்டு சிந்திசைத்துப் பாடிடவே
வாழும் பகைவர்நிலை வலுவிழந்து, செப்பமிகுஞ்
சீலத்திருநாடு செல்வம் செழித்தோங்க
அறிஞர்படை திரட்டி அமைப்பைச் செயல்படுத்தும்
பெரியோர் பணித்தொடக்கம் பேணுவதாம்! மாணவர்காள்
நீவீர் இணைந்திங்கே நிலைப்பாட்டின் பெற்றிமைகள்
யாவும் நிலைநிறுத்தும் அணியாய்ப் படைவகுத்துச்
சீரிய நும்பங்கைச் செலுத்தும் வினைக்களத்தே
வாரீர் எனவழைத்து வாழ்த்துகிறேன் வாழியரோ!

தேவகோட்டை, தென்மொழிச் செல்வி அரு. இன்னரசி, மறைவு !

பதினைந்து ஆண்டுக் காலத் தென்மொழி யன்பரும், தீவிரத் தனித்தமிழ்ப் பற்றாளரும், தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு ஆகிய மூன்று இதழ்களின் தொடர்ந்த வாசகருமான, தேவகோட்டை, தென்மொழிச் செல்வி: அரு. இன்னரசி என்னும் அழகம்மை, அண்மையில் உடல்நலக் குறைவுற்றுக் கடந்த 17-5-85 வெள்ளி, மாலை 2 மணியளவில் இயற்கை எய்தினர் என்னும் செய்தி கேள்வியுற்று மிகவும் வருந்தினோம். அன்னாரின் உறவினர்க்கும், உற்றார்க்கும், செய்தியறிவித்த தேவகோட்டை தென்மொழி அன்பர் குழுவுக்கும், தென்மொழி தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

அமைச்சர்.

ஈழத்துத் தமிழ்ப் புதினம்

(ஈழத்துத் தோன்றிய தமிழ்ப் புதனங்களிலிருந்து சில முகாமையான கருத்துகள் இங்கு தொகுத்துத் தரப் பெறுகின்றன நறுக்குத் தெறித்தாற் போலுள்ள இக் கருத்துகள் ஈழத்தமிழினத்தின் பல வகையான உணர்வுக் கோணங்களில் மிளிர்கின்றன. நடையைத் தூய தமிழ்ப் படுத்தித் தொகுத்துள்ளவர் 'செந்தமிழ்'. படித்துப் பாருங்கள்.)

1. இலங்கையர் கோன் எழுதிய 'முதற்காதல் (1912) என்னும் புதினத்திலிருந்து :

இளமை : ஓ இளமையே! உனக்கு அச்சம் என்பதில்லையா ? நீ ஒன்றையும் பொருட்படுத்த மாட்டாய்! உலகில் உள்ள எல்லாச் செல்வங்களுக்கும் தலைவன் நீ. துயரமும் ஏக்கமும் உன்னை வருத்துவதில்லை. அவை உனக்கு மகிழ்ச்சியையே கொடுக்கின்றன. நீ கொண்டிருக்கும் நெஞ்சழுத்தத்திற்கு ஓர் அளவில்லை. அதனால் உன் நாள்கள் ஒவ்வொன்றாகத் தேய்ந்து மறைந்து போவதுகூட உனக்குத் தெரியவில்லை. உன் பொருளெல்லாம் உருகி அற்றுப் போகிறது. தீயிற்பட்ட மெழுகு போலவும் உருகுகின்றது. ஒரு வேளை வருங்காலத்தைப் பற்றிச் சிந்திக்காமல், நிகழ்காலத்தையே நிலையுள்ளதாக மதித்து, எல்லாம் உன் வல்லமைக்குள் அடங்கியதுதான் என்று ஆணவங் கொண்டு உன் செல்வம் அனைத்தையும் காற்றிலே அள்ளித் தூற்றும் உன் கவலையற்ற மனப்பான்மை ஒன்றில்தான் உன் பெருமை தங்கியிருக்கிறது போலும் !

2. அ மரியதாசன் எழுதிய 'பனைநாடு (அ) பிளந்த உலகம்' (1953) புதினத்திலிருந்து :

காலைநேரம் ! காலை ஆகிறது; வானில் முகிலொன்றும் இல்லை. செஞ்ஞாயிறு குணகடலினின்று பரிதியாய்க் கிளம்புகின்றது. கடலில் அங்கொன்று இங்கொன்றாய் மிதந்து செல்வன யாவை?

அஃதோர் ஆவின் பிணம்! இஃதோர் ஆட்டின் உடல்! முகம் வானம் பார்த்தாற்போல் செல்வது ஓரரிவையின் உடலம்' குப்புற மிதந்து துவள்வது ஓர் ஆடவனின் உயிர் நீங்கிய யாக்கை!

மிதக்கின்ற பனை, தென்னைகளுக்கு ஒரு கணக்கே இல்லை. ஆனால் சில பனைகளின் முடிகளே தென்படுகின்றன. இவை மிக உயர்ந்தனவும் இன்னும் நிலம் பெயராதனவுமாய் இருத்தல் கூடும்.

3. கே.வி.எசு. வாசு எழுதிய 'குந்தளப் பிரேமா' விலிருந்து

விளம்பர உலகம் ! இந்த விளம்பர உலகத்தில் கம்பரும் காளி தாசரும் மறுபிறவி எடுத்து வந்தால் கூட ஓரளவு விளம்பரமில்லா

விட்டால் உலகம் அவர்களை மாபெரும் பாவலர்கள் என்று ஒத்துக்கொள்ளாது என்று இரமணி அடிக்கடி சொல்லுவான். 'தமிழ் நாட்டையே எடுத்துக்கொள்ளுங்களேன்! இன்றும் நம்மிடையே எவ்வளவு பாக்களை இயற்றித் தமிழை வளம்பெறச் செய்கிறார்கள்! அவர்களை நீங்களும் நானும் பெரும்பாவலர்கள் எனச் சொல்லிவிட்டால் உலகம் ஒப்புக்கொண்டு விடுமா? அவர்கள் செத்துச் சாம்பலான பிறகு ஏதோ ஓரிரண்டு நாளேடுகள் அவர்களது பழைய பாக்களைச் சுவைத்து விட்டுப் புளுகுகின்றன. உடனே ஒரேயடியாக மற்ற தாளிகைகளும் இந்திரன் சந்திரன் என்று வானளாவப் புகழ்கின்றன. பிறகு மாண்ட பாவலர்கட்கு நினைவு மண்டமும் தூணும் நிறுத்தக் கூட்டம் போட்டு முடிவெடுக்கிறார்கள். இந்த அளவு அந்தப் பாவலன் உயிருடன் இருக்கும் போதே ஏற்படுவதுதானே! வறுமையில் வயிற்றைச் சுருக்கிக் கூழுமில்லாமல் செத்துமடிகிறான் தற்காலப் பாவலன். அவனைப் போற்றி ஆதரிக்க ஆளில்லை. இதை எதற்குச் சொல்கிறேன் என்றால் இன்று கன்னாபின்னா என்று ஏதோ எழுதித் தள்ளும் அரைகுறைப் பேர்வழிகளைக்கூட விளம்பரம் என்னும் ஆற்றல் அறிவாளி'யாக்கி விடுகிறது. விளம்பரம்தான் இன்றைய வணிகத்தின் உயிர்நாடி என்று இரமணி ஒரு குட்டிச் சொற்பொழிவு செய்வான்.

4. மு. வே. பெ. சாமி எழுதிய 'யார் கொலைகாரன் ?' புதினத்திலிருந்து (1954)

பாட்டாளி : ஏழை என்றால் இன்பமாளிகைக்குப் பணக்காரன் ஏறிச்செல்லும் ஏணி என்றுதானே பொருள். அந்த ஏழைக்குப் பசியென்றால் அவர்களுக்குப் பன்னீர் இறைத்ததைப்போல, அவன் பட்டினி என்றால் பேரின்பமடைவார்கள். இறப்பு என்றால் மாந்தனுக்கு ஏற்படுத்தப்பட்ட நிலையான உயிர்ச்செலவு என நீட்டோலை வாசிப்பவர்கள். சிந்தும் கண்ணீர் அவர்களின் தேள் கொட்டிய கண்களுக்கு விருந்தாகக் காட்சியளிக்கும் பாட்டாளி என்றால் காலடியில் வீழ்ந்துறங்கும் நாய்கள் என வரட்டு 'வேதாந்தம்' பேசுவார்கள்.

5. உலகநாதன் எழுதிய 'பிரேமாஞ்சலி' யிலிருந்து (1954)

காதல் : என்னைப் பொறுத்தவரையில் காதலை வாழ்வுக்கு அடுத்தபடியாகவே வைக்க விரும்புகிறேன். நினைத்துப்பார்த்தால் காதல் வாழ்கையாகாது. வாழ்க்கை இல்லாவிட்டால் காதல் ஏது? ஆனால், காதலுக்கோ வாழ்வு முழுவதையுந் தின்னும் ஆற்றல் உண்டு என்பதை ஒப்புக்கொள்கிறேன். அதனால்தான் காதலை முகாமையாக்கிக் கொள்ளக் கூடாதென்று கூறுகிறேன். வாழ்க்கையை மலரவைக்க காதல் தேவை என்பதை நான் மறுக்கவில்லை. காதல் மிகமிகத் தேவைதான். ஆனால், அது வாழ்வில்லை; அஃது ஓர் உறுப்பாகவே இருக்கவேண்டும். லாழ்வோ

பரந்தது. காதலுக்காக இந்த வாழ்வையே பலியிடுவது முழுதும் பைத்தியக்காரத்தனம் மாத்திரமன்று; அப்படிப் பலியிடுவது அந்தக் கடவுளுக்குக்கூட அடுக்காதென்றே நினைக்கிறேன். காதலுக்காக வாழ்க்கையை-உயிரை-பலியிடுங் காதலர்களைப் பாவியங்கள் புகழ்ந்துகொண்டே இருக்கட்டும். அப்பாவியக் கற்பனைகளைப் படித்துவிட்டு நாமும் காதலுக்காக வாழ்க்கையைப் பலியிடவேண்டாம்.

6. எசு. பொன்னுத்துரை எழுதிய 'தீ' யிலிருந்து (1961):

உணர்ச்சிகள்: இனியவையாகத் தோன்றியவையெல்லாம் துன்பச் சாயலில் கருகுகின்றன. மங்கையின் பட்டுக் கன்னங்களை நினைவுபடுத்திய அந்தி வானம், கூறிய வாளினால் பிளந்தெறியப் பட்ட மூளி முண்டங்களிலிருந்து பாயும் அரத்தத்தை நினைவு படுத்துகின்றது. வேல்விழி மாதரின் மயக்கமூட்டும் சிந்துகளை மனத்தில் நிறுத்திய விண்மீன்கள் புன்னகை புரள, அலை தெளிய, தேனூறும் குமரி இதழ்களை நினைவுறுத்தும் குங்குமச் சிமிழ் போர்க்களம் விட்டோடிய கோழையின் முதுகில் ஏற்பட்ட காயத்தின் சாயலைக் காட்டுகிறது. பஞ்சு மெத்தை, நான் படுத்துக்கொண்டதும் தீப்பற்றி எரிகிறது. உணர்ச்சிகள் மரத்துப் போகின்றன.

7. இளங்கீரன் எழுதிய "நீதியே நீ கேள்", புதினத்திலிருந்து 1959:

சுரண்டல் முறை: வயிற்றுக்காக - கூலிக்காக - ஏழைகள் பணக்காரர்களிடம் வேலை செய்கிறார்கள். ஆனால், அவர்கள் உயிரை மட்டும் வைத்துக்கொண்டு வாழ்வதற்கு எவ்வளவு தேவையோ அவ்வளவுதான், அவர்களுக்கு ஊதியமாகக் கொடுக்கப்படுகிறது. மற்றப் பயனெல்லாம் பணக்காரர்களுக்கு - சொத்துக் குரியவர்களுக்குச் சேர்கிறது. அதை அவர்கள் ஊதியம்-வருமானம் என்ற பெயரில் தங்கள் கணக்கில் வரவு வைத்துக்கொள்கிறார்கள், இந்தச் சுரண்டல் முறையிலேயே முழுக்க முழுக்க ஊறிப்போன முதலாளி பரமசிவம் பிள்ளையும் தன் கடை ஊழியர்களிடமும் இப்படித்தான் நடந்துகொண்டாரென்றால் வல்லிபுரத்தை மட்டும் விட்டு வைப்பாரா?

அன்பர்கள் கவனிக்க...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விருப்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5-மணிக்குமேல், எழுதி இசைவுபெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கொள்கிறோம். — அமைச்சர்.

நீ, செக்கு மாடா?

தரங்கை- பன்னீர்ச்செல்வம்

சிந்தியாமல் பிதற்றிடுவோர் பிதற்றி டட்டும்;
சிந்தித்துப் பார்தமிழா; இங்கி லாந்தர்
வந்திடாமல் நின்றிருந்தால் - வம்ப மாக்கள்
வல்லாண்மை அடிமையாட்சி வகுக்கா விட்டால்,
இந்தியாவில் தமிழ்நாடும் இணைக்கப் பெற்றே
இழிவடிமை மாநிலமாய் இன்னல் ஆமோ?
நொய்ந்திடாமல் அரசியல்எத் தரைப்போல் நீயும்
நொள்ளைக்கூத் தாடிடாதே, நோய்மை நீக்கு!

இந்தியாவே ஒன்றில்லை என்னும் உண்மை
இளையோர்க்குத் தெரியாமல் மறைத்து விட்டு,
'மந்தி'யாகி - இல்லையில்லை - 'மந்திரி' யாகி
மன்னரைப்போல் வாழ்கின்ற முதலா ளர்கள்,
"இந்தியாவே இந்திராதான் இரண்டன் றெ"ன்றே
இப்பொழுது புதுப்புரளி எழுப்பு கின்றார்;
இந்திராவே சிதறுண்டு வீழ்ந்த பின்னர்,
இந்தியாவின் நிலையென்ன, சிதறி டாதா?

குந்தியொரு நிமையம்நீ எண்ணி டாமல்
'குடி'யரசன் ஆகிவிட்டாய்; 'குமுதம்' 'இதயம்'
முந்திவிரி கவர்ச்சிகளில் மூழ்கி விட்டாய்!
'முன்றானை'க் 'கனவு'களில் மூப்ப டைந்தாய்;
இந்தியாதான் தாய்நாடா? இந்தி உன்னை
ஈன்றெடுத்த தாய்மொழியா? 'இந்து' மதமோ
செந்தமிழா, இனவொருமைச் செழிப்பு நல்கும்?
சிந்தித்துப் பார்,நீதான், செக்கு மாடா?

"தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	35 உருபா	40 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	8 ,,	18 ,,	25 ,,
தனியிதழ் :	1.25 ,,	3-00 ,,	4.00 ,,

ஓரிதழுக்கு உருபா 2-50 மேனி முன்பணம்
கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

குமுகவியல் :

உருசியாவில் குடும்பப் பொறுப்பை ஏற்பது கணவனா மனைவியா?

உருசியாவில் ஒரு குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பணிகளை ஆற்றுகின்றனர். அவர்களுக்கு வழி காட்டி நடத்திச் செல்பவர் யார்? கணவனா, மனைவியா?

60 ஆண்டுகளுக்கு முன்னால் ஆண்கள் தாம் குடும்பத் தலைவர்களாக இருந்து வந்தனர். அப்போது இருந்த பொருளியல் அமைப்பு ஆண் ஆளுமைக்கு ஆதரவாக இருந்தது. குடும்பத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான பணத்தை அவன் சம்பாதித்து வந்தான். பெண்களைப் பொறுத்த வரையில், அவர்களில் பெரும்பாலானவர்கள் கணவனையே நம்பி வாழ்ந்ததால் அவர்களுக்குத் திருமணம்தான் பிழைப்புக்கு வழி. குடும்பச் செயல்களை நடத்துவதற்கான உரிமையைச் சட்டமும் கணவனுக்கு அளித்தது. எனவே, குடும்பத் தலைவனான கணவனுக்கு மனைவி கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென்பது அன்றைய உருசிய அருசாளுமைச் சட்டம்.

1917-ஆம் ஆண்டு அக்டோபர் சமனிலைப் (சோஷலிசப்) புரட்சிக்கு முன்னால் உருசியாவில் நிலவிய நிலைமை இதுதான். புரட்சி வெற்றி பெற்றவுடனேயே, எல்லாத் துறைகளிலும் ஆண்களுக்குச் சமமாகப் பெண்களுக்கும் சம உரிமை அளிக்கும் சட்டங்களைப் புதிய அரசு இயற்றியது. சோவியத்து ஆட்சிக் காலத்தில், குமுகாயத்தின் பொருளியல், அரசியல் மற்றும் குமுகாய வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் பெண்கள் தீவிர, சம பங்காளிகளாக ஆகிவிட்டனர். எடுத்துக்காட்டாக 1928-இல் நாட்டின் பொருளியலில் தொழிலாளர், மற்றும் ஊழியர்களிடையே 28 இலக்கம் பெண்கள் தாம் இருந்தனர். இப்போது அவர்களில் பெண்கள் தொகை 5.93 கோடியாக, அஃதாவது மொத்த தொழிலாளர், மற்றும் ஊழியர் தொகையில் 50 விழுக்காட்டிற்கு மேலாக உயர்ந்துள்ளது.

இங்கு மற்றோர் உண்மையையும் கவனிக்க வேண்டும். சோவியத்து ஒன்றியத்தில் ஆண்கள், பெண்கள் ஆகிய இரு பாலாரின் கல்வித் தரமும் ஒரே அளவாகும். ஆனால் உயர் கல்வி, மற்றும் சிறப்பு இரண்டாம்நிலைக் கல்வி பள்ளிகளில் படித்துப் பட்டம் பெற்றவர்களில் பெண்களின் பங்கு 59 விழுக்காட்டை எட்டுகிறது. பெண்கள் இப்போது பொருளியல் அடிப்படையில் உரிமை பெற்றவர்கள். ஏனெனில், சோவியத்து ஒன்றியத்தில், பணிபுரியும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே சம்பளத்தில் வேற்றுமை இல்லை. குமுகாய இயல் புள்ளி விளத்தங்களின்படி

சோவியத்துக் குடும்பங்களில் மூன்றில் ஒரு பங்கில் மனைவியின் வருமானம், கணவன் வருமானத்திற்குச் சமமாக உள்ளது. மற்றும் மூன்றில் ஒரு பங்குக் குடும்பங்களில் கணவன் வருமானத்தை விட மனைவியின் வருமானம் அதிகமாக உள்ளது.

இன்று சோவியத்துக் குடும்பத்தை வழிகாட்டி நடத்திச் செல்பவர் யார்? பொது மக்களிடையே திரட்டபட்டக் கருத்துகளின்படி, மிகப் பெரும்பாலான சோவியத்துக் குடும்பங்களில், அஃதாவது 85 முதல் 95 விழுக்காடு வரையிலான குடும்பங்களில், பெண்கள், குடும்பத்தின் 'பொருள் அமைச்சர்' போல் செயல்படுவதாகத் தெரிகிறது. குடும்பத்தில் முகாமைக் 'கல்வி அதிகாரி'யும் பெண் தான்.

இன்றைய சோவியத்துக் குடும்பத்திற்குப் பெண்தான் 'தலைவி' என்பது இதன் பொருளா? இந்தக் கேள்விக்கு விடை அளிப்பதற்கு முன்னால் ஒரு செய்தியை தெளிவுபடுத்துவது தேவையாகும். அஃதாவது அரசியல் சட்டத்திலோ, நகரியல் (Civil) சட்டத்திலோ, அல்லது திருமணச் சட்டத்திலோ, 'குடும்பத் தலைவர்'' என்ற சொல் பயன்படுத்தவில்லை. ஆனால் போதுமான மக்களைப் பொறுத்த வரையில் இந்தச் சொல் தொடர் ஒரு தனிச்சிறப்புப் பொருள் பெற்று விட்டது. இப்பொழுது ஒருவர் சட்டத்தின் மூலம் குடும்பத்தின் தலைவனாகவோ, தலைவியாகவோ ஆவதில்லை என்றும், தலைமை தாங்குவதற்கான திறமையினாலும், உளவியல் தன்மையினாலும் தலைமை ஏற்பதாகவும் இலாரிசா குசனெத்சோவா என்ற ஆராய்ச்சியாளர் கூறுகிறார். ஆனால் இதற்குச் சில திட்டவட்டமான பண்புகள் இருக்கவேண்டும். எடுத்துக் காட்டாகக் குடும்பத்தை எதிர்நோக்கும் சிக்கல்களை எதிர்கொள்ளும் ஆற்றல், சச்சரவுகளைத் தீர்த்து வைக்கும் திறமை முதலியவை அவற்றில் சில. குடும்பத்தில் ஆண்தான் முகாமைப் பங்கு ஆற்றுகிறான் என்பது இதற்குப் பொருளா? பல குடும்பங்களில் இப்படி நடக்கிறது. ஆனால் குடும்பத்திற்குத் தலைமை தாங்குவதற்குப் பெண்களே அதிகத் தகுதி உள்ளவர்கள் என்பது குமுகாய இயல் ஆராய்ச்சிகளிலிருந்து தெரிகிறது.

ஆனால் எல்லாப் பெண்களுமே தங்கள் தலைமைப் பதவிபற்றி மகிழ்ச்சி அடைகின்றனர் என்று கூறிவிட முடியாது. "இலித்ரதுர்னுயா கசெதா'' என்னும் தாளிகைக்கு ஒரு பெண் வாசகர் எழுதியிருந்த கடிதத்தில், "என் குடும்பத்திற்கு நான் தான் தலைவி; இந்தத் தகுதி எனக்குப் பிடிக்கவேயில்லை'' என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் கணவனின் ஆளுமையினால் தொல்லைப்படுவதாகவும் வேறு பெண்கள் சிலர் எழுதியிருக்கின்றனர். கணவனோ-மனைவியோ, ஒருவர் மீது ஒருவர் ஆளுமை செலுத்துவதைவிடக் கணவன்-மனைவி சம நிலையையே அவர்கள் விரும்புகின்றனர்.

குமுகத்தில் ஆணுக்குச் சமமாகச் சமநிலை பெற்றுப் பொருளியல் உரிமையும் பெற்றுள்ள பெண், மண வாழ்விலும், சமமாக இருக்க விரும்புகிறாள். ஆனால் மனைவியின் சமநிலை முயற்சியை எதிர்த்து, வீட்டு வேலைகளைச் செய்யாமல் தப்ப முயலும் கணவன்மாரும் இருக்கின்றனர்.

குடும்ப வேலைகளைக் கணவனுடன் சமமாகப் பகிர்ந்து கொள்ளும் பெண்களில் 60 விழுக்காட்டுப் பேருக்குமேல், தங்கள் மண வாழ்க்கை மகிழ்ச்சியுடனிருப்பதாகக் கருதுகின்றனர். அன்றாடக் குடும்ப வேலைகளில் பெரும்பாலானவற்றைச் செய்யும் பெண்களில் 80 விழுக்காட்டுப் பேர் தங்கள் மண வாழ்க்கை பற்றி ஏமாற்றம் தெரிவித்துள்ளனர். மனைவியை 'வீட்டு வேலைக்காரி' போல் கருதும் கணவன்மாரின் நிலைமை இழிவானதாகும். இந்த நிலைமையில் இருக்க இசைகின்ற பெண்கள் குறைவு. இறுதியில் அவர்களுடைய மண வாழ்க்கை மணமுறிவில் போய் முடிகிறது.

ஆனால், குடும்பங்களில் பழைய முறைகள் பின்பற்றப்படுவதாகவும், குடும்ப வேலைகளை ஆணும் பெண்ணும் சமமாகப் பகிர்ந்து கொள்ளும் மனப்பான்மை அதிகரித்து வருவதாகவும் மக்கள் இயல்அறிஞர்கள் கூறுகின்றனர். குடும்ப இணையர்களில் 50 விழுக்காட்டுப் பேர் குடும்ப வேலைகளை முழுமையாகவோ, அல்லது அதில் ஒரு பகுதியையோ பகிர்ந்து கொள்கின்றனர். பள்ளிக் கூடத்தில் படிக்கும் காலத்திலிருந்தே, குடும்ப வேலைகளைப் பகிர்ந்து கொள்ளும் மனப்பான்மை சோவியத்து இளைஞர்களிடையே வளர்க்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, நாடு முழுவதிலும் 'முதுநிலை மாணவர்களின் பாடத்திட்டத்தில், 'மண வாழ்வின் நெறிமுறைகளும், மனவியலும்' என்ற ஒரு புதிய பாடம் புகுத்தப்பட்டுள்ளது.

வீட்டு வேலைகளைப் பகிர்ந்து கொள்வது தவிர, வேறு துறைகளிலும் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே கருத்து வேற்றுமைகள் ஏற்படுவது உண்டு. ஒவ்வொரு குடும்பத்திலும் இருசாரப் பின் நிலையில் நிறைவற்ற தன்மைக்கு ஏதாவது காரணம் இருக்கிறது. இந்தச் சிக்கல்களைத் தீர்த்து வைக்கத் திருமண வழிகாட்டி மன்றங்கள், (Councils) மனவியல் நடுவங்கள் (Centers), புது மண இணையர்களின் குழுவங்கள் (Clubs) முதலிய பல நிறுவனங்கள் உதவுகின்றன.

அலெக்சீ இயான்கோவ்

இந்திய அரசே இன்னுமா உறக்கம்?

(இலங்கைத் தமிழரின் அவலநிலை விளக்க நூல்)

விலை 5.00; அஞ்சல்செலவு: 1.00; பதிவஞ்சல் செலவு : 5.00

அறிவன் பதிப்பகம்: 2/5, காளிகோயில்தெரு. தமிழூர்-புதுச்சேரி-9

காப்போம் தமிழ்!

— கொடுமுடி. க அ. ஒளியவன்

இழிவேசெயும் கழிபேதையர் இணைப்பையறுக் காமல்
பழியேசெயும் பகையோருடன் பழகல்துறக் காமல்
விழிப்போடிடர் குழியில்விழும் விளங்காமடம் போல
இழிவேவரும் இவரோடினும் இணக்கம்பெறு வதுவே!

அந்நாள்முதல் இந்நாள்வரை அணுகிப்பெறக் காணோம்
நந்நாள்வரும் நாளைவரும் நவின்றுரையும் காணோம்
எந்நாள்வரும் நந்நாள்எனின் எடுத்துப்புகல் வார்யார்?
இந்நாள்வரும் இவணேவரும் இயங்கப்பெற லாமே!

அறிவேசிறி தளவும்இலை என்றேநினைத் தாரா!
செறிவேநமக் கில்லையெனச் செய்தார்முடி வோதான்?
பொறியைந்தினும் அலைக்ககியே பொருதாலென வாகும்?
முறிபாடற முன்னேறுக மூளப்பெரும் பாரே!

நிலையாய்ஒரு வளவாழ்வினை நிறைவேபெறல் யாரே
அலையாய்அலை பவரும்மறு நாளில்வெறுங் கூடாய்
இலையாகியும் போவார்இதை இன்னேயெதிர் காண்போம்!
உலையாதினி உஞற்றும்பணி உர்த்தாகுக நன்றே!

காலம்ஒரு காலம்எரி மலையாய்க்கனல் கக்கும்
கோலம்புது வாகும்,அவண் கொள்ளும்துறை தோறும்
சீலம்பட வாழும்முறை செறிவாய்வரும் அந்நாள்!
ஆலம்விதை சிறிதேயதன் ஆக்கம்பெரி தாமே!

வாழ்ந்தால்உயர் வாழ்வைப்பெறும் வகைமைபெற வேண்டும்
வீழ்ந்தால்மற மாகும்படி வீழ்த்தப்பட வேண்டும்.
ஆழ்ந்தேயினும் அடிமைத்தன ஆழம்அறி யாமல்
சூழ்ந்தேயெழுந் திட்டோம்அமர் சங்கம்முழங் கிடுதே!

உலகேயினி அழிந்தேபல ஊழிக்கணக் காகி
நலமேபுது உலகம்பிறந் தாலும்முதல் நாமே
விளைவாகிட வீறுகிட, வித்தாகிட வேண்டும்!
கலையேகலாந் தரும்பேறெனக் காப்போம்தமிழ் வீறே!

நம்மைப்பல காலும்பகை நலிவைக்கொடுந் தாலும்
அம்மையென வப்பன்என அன்பால்அணைத் திட்டு
நம்மைநமக் குணர்த்தும்மறை நலமேபயில் விக்கும்
செம்மல் பா வலரேறு செப்பும்குரு வாமே!

பொங்குங்கடற் புயலோடுடன் போராடிடு கின்ற
பொன்மாமணி நாவாயெனப் பொருந்தித்துயர் பட்ட
அன்னைத்தமிழ் மீட்டுக்கரை அண்மப்புரந் திட்ட
செம்மல் பா வலரேறு தெய்வக் குடமுனியே!

உடலுக்குயிர் உலகுக்கொளி உண்மைக்குரன் போல
தொடர்புற்றுயர் தொன்மைத்தமிழ் இனத்துக்கிவர் மூச்சு!
சுடர்விட்டிடும் பெருஞ்சித்திரம்! சுற்றித்தமிழ் வல்லி
படர்வுற்றிடும் கொழுகொம்பிது பறைவாருல கோரே!

Scanned with CamScanner

ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற முற்படாது

ஏமாற்றிக் கொண்டிருக்கும் தமிழக அரசும், குழப்பிக் கொண்டிருக்கும் வஞ்சகர்களும்!

— மலர்மாறன்

முன்னுரை :

இலங்கைத் தீவிலே தமிழர்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஈழத்தமிழ் இனத்தைப் பூண்டோடு ஒழித்துக் கட்டுவேன் என்று செயவர்த்தனா கொக்கரித்துக் கொண்டு தமிழர்களைப் படுகொலை செய்து கொண்டிருக்கிறார்.

ஈழத்தமிழ் இனம் தன்னை அழிவிலிருந்து காப்பாற்றிக் கொண்டு பாதுகாப்பாக வாழ, ஓர் உரிமை ஈழத்தமிழ் நாட்டை அமைத்துக் கொள்ளுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை உருவாகி விட்டது.

உரிமை ஈழத்தமிழ் நாட்டை அமைக்க ஈழத்தமிழ் உடன் பிறப்புகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உதவ வேண்டுவது இந்தியத் தமிழர்களாகிய நமது கடமையாகும்.

நம் ஈழத்தமிழ் உடன்பிறப்புகளுக்கு நாம் ஆற்ற வேண்டிய அந்தக் கடமையைச் செய்யவிடாது தடுத்துவிட, நம்மையே குழப்பி ஏமாற்றிக் கொண்டிருக்கின்றன, தமிழர்கள் என்று தங்களைப் புனைவு செய்துகொண்டுள்ள வஞ்சகக் கூட்டமும், எம்.சி. இராமச்சந்திரனின் தலைமையிலுள்ள தமிழக அரசும்.

தமிழர்கள் எப்படி ஏமாற்றப்பட்டுக் குழப்பப்படுகிறார்கள் என்பது, இத் தொடர் கட்டுரையில் விரிவாக விளக்கப் பட்டுள்ளது.

தமிழர்கள் இவற்றைப் படித்து, உண்மை நிலையைத் தெரிந்து தங்கள் கடமையைச் செய்ய முன்வர வேண்டும்.

— கட்டுரை ஆசிரியர்

ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற இந்தியத் தமிழர்களாகிய நாம் என்ன செய்ய வேண்டும்?

1983-ஆம் ஆண்டு சூலை மாதம் இலங்கைத் தீவிலே தமிழர்கள் ஆயிரக்கணக்கில் படுகொலைச் செய்யப்படுகின்றனர் என்று கேள்விப்பட்டவுடன் தமிழகமே கொதித்தெழுந்தது. உலகில் எங்கெங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கின்றார்களோ அங்கங்கெல்லாம் ஊர்வலங்களும், கண்டனக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. செயவர்த்தனாவின் கொடும்பாவிகளைத் தமிழகத்தில் உள்ள பட்டணங்களில் மட்டுமன்று, பட்டிதொட்டிகளிலெல்லாம் தெருத்

தெருவாக இழுத்துத் தீயிட்டுக் கொளுத்திக் கொள்ளி உடைத்து, தங்களின் கொதிப்பை உணர்வுகளைத் தெரிவித்தனர் தமிழ்நாட்டு மக்கள். ஈழத்தமிழர்களை எப்படியும் காப்பாற்றியாக வேண்டும் என்ற உணர்வு ஒவ்வொருவர் உள்ளத்திலும் உறுதி கொண்டிருந்தது.

24 மாதங்கள் உருண்டோடிவிட்டன. இப்போதும் தமிழர்கள் ஈழத்திலே படுகொலைகள் செய்யப்பட்டுக் கொண்டேயிருக்கின்றார்கள். ஆனால், அன்று, தமிழ் மக்களிடையே எழுந்த கொந்தளிப்பு, இன்று ஏற்படவில்லை. ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று அன்று ஏற்பட்ட துடிப்பு இன்று ஏற்படவில்லை.

எல்சல்வடார் என்று ஒரு நாடு அமெரிக்கக் கண்டத்தில் எங்கோ ஓர் இடத்தில் இருக்கின்றது. அங்கு வாழும் மக்கள் தமிழ் இனத்தை சேர்ந்தவர்கள் அல்லர். அவர்களை அந்த நாட்டு அரசு ஆயிரக்கணக்கில் கொல்லுகின்றார்கள் என்று தாளிகைகளில் படிக்கும்போது தமிழர்களுக்கு அம் மக்களின் மீது இரக்கம் ஏற்பட்டது. அவர்களைக் காப்பாற்ற நேரடி நடவடிக்கைகளில் இறங்கும் எண்ணம் ஏற்படவில்லை. காரணம், அவர்கள் வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள்.

ஈழத்தமிழர்கள் நமது தமிழ் இனத்தை சேர்ந்தவர்கள். அவர்களும், நாமும் தமிழன்னைக்குப் பிறந்தவர்கள். உடன் பிறப்பாளர்கள் - அந்த உடன்பிறந்தவர்களுக்கு இன்னல் ஏற்படும்பொழுது அவற்றைக் களைந்தெரிய நேரடி நடவடிக்கையில் இறங்க வேண்டியது நமது கடமையாகும்

ஈழத்தமிழர்கள் ஆயிரக்கணக்கில் படுகொலைகள் செய்யப்பட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். அவர்களுக்கு இரக்கம் தெரிவித்துவிட்டு, எல்சல்வடார் படுகொலைகளைக் கண்டு நடவடிக்கையில் இறங்காதிருப்பதுபோல் பேசாமல் இருக்க வேண்டுமென்று தமிழகத்திலே கருத்துப்பரப்புதல் செய்யப்படுகின்றது

நமக்கு, ஈழத்தமிழர் சிக்கல் எல்சல்வடார் சிக்கல் போன்றதன்று. ஈழத்தமிழன் நமது தமிழ் இனத்தவன்; அவனது இன்னலைத் துடைக்க வேண்டியது நமது கடமையாகும்.

'இலங்கை வேறு நாடாம், இந்தியா வேறு நாடாம். ஈழத் தமிழர்களுக்கு நாம் உதவி செய்வது அனைத்துத்தேசச்சட்டப்படி குற்றமாம்', இப்படித் தமிழகத்திலே கருத்துப்பரப்பித் தமிழர்களைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

நாடுகள் என்றால் பிரிக்கவே முடியாத ஓர் அமைப்புப் போலவும், அதைப் பிரிப்பது உலகத்திலேயே மிகப்பெரிய குற்றம் போலவும் எண்ணுமாறு தமிழகத்திலே கருத்துப்பரப்புதல் செய்து கொண்டிருக்கின்றனர்.

கடந்த பத்தொன்பதாம் நூற்றாண்டில் உலகத்தில் உரிமை பெற்ற நாடுகள் 50 கூட இல்லை. ஆனால் இந்த இருபதாம்

நூற்றுண்டில் ஏறத்தாழ 160 தன்னுரிமை நாடுகள் உலக நாடுகள் ஒன்றிய அவையிலே உறுப்புகளாக உள்ளன.

நூறு ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான புதிய தன்னுட்சி நாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தன்னுரிமை நாடுகள் ஏன் அப்படி நிறைய உருவாக்கப் பட்டுள்ளன ?

பல இன மக்களைக் கொண்ட நாட்டை ஆட்சி செய்யும் அரசு ஓர் இனத்தைக் காப்பாற்றி இன்னோர் இனத்தை அழிக்க முற்பட்டால், அந்த அழிக்கப்படும் இனம், தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, தன்னுரிமையுள்ள ஒரு நாட்டையும் அரசையும் அமைத்துக் கொள்கிறது. அப்படி அமைக்கப் பயன்படுத்தும் வழி, புரட்சிநிலையினதாகவும் இருக்கலாம் - அமைதி வழியான தாகவும் இருக்கலாம்.

உலகத்தில் உள்ள எந்த இனமும் தன்னை அழிக்கும் அரசின் கீழ் இருந்தே அழிந்து கொண்டிருக்காது. அப்படி எந்த இனமும் அழிந்து போக வேண்டுமென்று அனைத்துத்தேசச் சட்டமும் சொல்லவில்லை.

இலங்கை அரசு சிங்கள இனத்தைக் காப்பாற்றி, ஈழத்தமிழ் இனத்தை அழித்துக் கொண்டிருக்கின்றது. ஈழத்தமிழ் இனம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள உரிமையுடைய ஈழத்தமிழ் நாட்டை அமைக்கப் போராடுகின்றது.

நாமும் தமிழர்கள் அவர்களும் தமிழர்கள். நம் தமிழ் இனம் இலங்கையிலே அழிக்கப்படாமல் காப்பாற்றப்பட நாம் உதவி செய்ய வேண்டியது நமது முழுமுதல் கடமையாகும்.

சைப்ரசு தீவிலே துருக்கி இனத்தவர் கொடுமைபடுத்தப் படுகிறுர்கள் என்று கேள்விப்பட்டவுடன், துருக்கி அரசும் தம் இனத்தைக் காப்பாற்ற, சைப்ரசு தீவிற்கு 20,000 படைவீரர்களை அனுப்பியுள்ளது.

இந்தச் செயலை துருக்கி நாட்டிலுள்ள எவரும், அனைத்துத் தேசச் சட்டத்திற்கு மாறுனது என்று கூறிக் கொண்டிருக்கவில்லை. ஆனல் இலங்கையிலே, கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழர்களைக் காப்பாற்றச் செல்ல முற்பட்டால், அஃது அனைத்துத் தேசச் சட்டத்திற்கு முரணுனது என்று தமிழகத்தில் கருத்துப் பரப்பிக் கொண்டிருக்கின்றது ஒரு வஞ்சக இரண்டகக் கூட்டம்.

இதைத் தமிழர்கள் புரிந்துகொண்டு செயல்பட வேண்டும். மேலும் தமிழர்களைப் படுகொலை செய்துகொண்டிருக்கும் செயவர்த்தனவிற்கும், சிங்களக் குண்டர்களுக்கும், படைத்துறையினருக்கும் அனைத்துத்தேசச் சட்டபடி தூக்குத்தண்டனை கொடுக்க வேண்டும். அவர்கள் அனைத்துத்தேசச் சட்டத்தைப் பற்றிக் கவலைப்படாமல் தமிழர்களைக் கொன்று கொண்டேயிருக்கிறுர்கள்.

ஆனால், கொல்லப்படும் ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற முற்படுவது அனைத்துத் தேசச்சட்டப்படி, குற்றம் என்று தமிழகத்திலே கருத்துப்பரப்பித் தமிழர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள், தமிழர்கள் போல நடித்துக்கொண்டிருப்பவர்கள்.

தமிழர்களாக நடித்துக்கொண்டிருப்பவர்களுக்குத் தமிழ் உள்ளம் இருக்கும் என்று எண்ணுவது சரியானதாக இருக்காது. ஈழத்தமிழர்கள் சாகடிப்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்துத் தமிழர்களாக நடித்துக் கொண்டிருக்கும் அவர்களின் உள்ளம் பதைக்க வழி இல்லை. ஆகவே அவர்கள் தமிழர்களை ஏமாற்ற இப்படிக் கருத்துப்பரப்பிக் கொண்டிருக்கின்றனர்.

தமிழர்களைப் படுகொலை செய்து கொண்டிருக்கும் செயவர்த்தனாவிற்குக் கொடுக்கப்படும் தண்டனையில் 100-இல் ஒரு பங்கு தான் ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற முற்படுவோர்களுக்கு அனைத்துத்தேசச் சட்டத்தில் கொடுக்க முடியும்.

ஆகவே, இந்த ஏமாற்றுக்காரர்களின், 'தமிழர்களைக் குழப்பும் பேச்சுகளைப் புரிந்து கொண்டு தமிழர்கள் செயல்பட வேண்டும்.

எப்படியெல்லாம் தமிழர்கள் குழப்பப்பட்டு இருக்கின்றார்கள் என்பதை ஒரு சிறு எடுத்துக்காட்டு மூலம் பார்க்கலாம்.

சில மாதங்களுக்கு முன்னால் யாழ்ப்பாணப் பகுதிகளில் இலங்கைப்படை நடவடிக்கை எடுத்து நூற்றுக்கணக்கான தமிழர்களைக் கொன்று கொண்டிருந்தது. இங்கே ஒரு சிற்றூரில் 50 அகவை மதிக்கத்தக்க தமிழர் ஒருவர் 'தினமணி' செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்தார். அவரிடம் ஒரு கேள்வியைக் கேட்டேன் —

ஈழத்தமிழர்களை இப்படி இலங்கைப் படையினர் படுகொலை செய்து கொண்டிருக்கின்றனரே, இதற்கு ஒரு முடிவுகட்ட நாம் நடவடிக்கை எடுக்க வேண்டாமா?'

'பிழைக்கப்போன இடத்தில் நாட்டைப் பிரித்துக் கொடு என்று கேட்டால் அவர்கள் சும்மா விடுவார்களா? — அதனால் தான் கொல்லுகிறார்கள்' என்று அந்தத் தமிழர் விடை கூறினர்.

'தமிழர்கள் எல்லாரும் இலங்கைக்குப் பிழைக்கப் போனவர்களாம் - அவர்கள் இலங்கையில் ஈழத்தமிழ்நாடு கேட்பது தவறாகும்' இப்படி ஓர் எண்ணத்தை அந்தத் தமிழரின் மனத்தில் ஏற்படச் செய்துள்ளனர்.

ஈழத்தமிழர்கள் எல்லாரும் இலங்கைக்குப் பிழைக்கப் போனவர்கள் என்று யார் சொன்னது?' என்று அடுத்த கேள்வியைக் கேட்டேன்.

'அதுதான் செய்தித்தாள்களில் விளக்கமாக எழுதிக் கொண்டு தானே இருக்கின்றார்கள். அவற்றைப் படித்துத்தான் நான் தெரிந்து கொண்டேன்'. என்று அந்தத் தமிழர் விடை கூறினர்.

Scanned with CamScanner

'நீங்கள் எந்தச் செய்தித்தாள் படிக்கின்றீர்கள்'? எனது அடுத்த கேள்வி இது

'நான் வழக்கமாகத் தினமணி தாள்தான் படித்துக் கொண்டிருக்கின்றேன்', என்று அந்தத் தமிழர் விடை கூறினார்.

'இலங்கை நாட்டிலே 35 இலக்கம் தமிழர்கள் இருக்கிறார்கள். அதில் 10 இலக்கம் பேர்தாம் இங்கிருந்து பிழைக்கப்போனவர்கள். மீதம் 25 இலக்கம் பேர்கள் வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே அங்கே வாழ்ந்து கொண்டிருக்கும் தொன்மைத் தமிழ் மக்கள் ஆவார்கள். சிங்களவர்கள் காடுகளிலே காட்டு விலங்காண்டிகளாக வாழ்ந்து கொண்டிருந்த போதே ஆட்சி அமைத்துச் சிறப்பாக வாழ்ந்து கொண்டிருந்தவர்கள்தாம். அந்த ஈழத்தமிழர்கள். அவர்கள் தங்கள் சொந்த நாட்டிற்குத் தான் உரிமை கேட்கிறார்கள்' என்று விளக்கமாகக் கூறினேன்.

அந்தத் தமிழர் 'உண்மை அதுதானா' என்று கேட்டு மிகவும் வியப்பு அடைந்தார்.

இப்படி எத்தனையோ குழப்பங்களைத் தமிழர்கள் இடையில் ஏற்படுத்தியுள்ளன, தமிழகத்திலுள்ள பெரும்பான்மையான செய்தித்தாள்கள்.

அந்தச் செய்தித்தாள்களில் ஈழத்தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை விளக்கமாக 8 பத்தித் தலைப்புகளில் எழுதுகிறார்கள். அந்தச் செய்திகளின் கடைசி வரிகளில் இப்படிப்பட்ட தவறான செய்திகளையும் அச்சிட்டு விடுகின்றனர்.

இவற்றைப் படித்துத் தமிழர்கள், என்ன செய்ய வேண்டும் என்பது புரியாது குழப்பமடைந்துள்ளனர்.

இதுமட்டுமா? இன்னும் எத்தனை எத்தனைக் குழப்பக் கருத்துகள்.........அப்பப்பா........

இந்தியத் தமிழர்கள் வேறு, இலங்கைத் தமிழர்கள் வேறு என்றும், அதனால் இந்தியத் தமிழர்கள் இலங்கைத் தமிழர்களுக்கு உதவி செய்ய வேண்டிய தேவையில்லை என்றும், தமிழர்களை இரண்டுபடுத்திக் கூறிக் குழப்புகிறார்கள்.

அதன் பின்னர் இலங்கைத் தமிழர்களிலேயே மலையகத் தமிழர்கள் வேறு; தொன்மைத் தமிழர்கள் வேறு என்றும், ஈழத் தமிழ்நாடு விடுதலை அடைந்தால் தொன்மைத் தமிழர்களுக்குத்தன் நன்மையே தவிர, இந்தியாவிலிருந்து சென்றுள்ள மலையகத்தமிழர்களுக்குத் தீமைதான் அதிகரிக்கும் என்றும் கூறி, ஈழத்தமிழர்களை இரண்டு படுத்தி, இப்போது குழப்பிக் கொண்டிருக்கின்றனர்.

இவற்றிற்கெல்லாம் மேலாகத் தமிழக அரசு, ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற சரியான நடவடிக்கை எடுக்காமல் ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. (தொடரும்)

Scanned with CamScanner

பாவேந்தர் இன்றிருந்தால் — கடவூர். மணிமாறன்

உரம்வாய்ந்த செந்தமிழின் உயர்வைக் கூறி
ஒப்பரிய சுவைநலனை எடுத்துக் காட்டி
நரம்பெல்லாம் இரும்பாகும் வண்ணம் நாட்டில்
நற்றமிழ வுணர்வுகளைத் தோற்று வித்த
திறம்வல்ல பெரும்புலவன்; தமிழ்க்குக் கேடு
திரண்டுவரின் எரிமலையாய்க் கனன்று பொங்கும்
புரட்சிமிகக் கொண்டிருந்த பாவேந் தன்தம்
புகழ்கூறின் மெய்சிலிர்க்கும்; பூக்கும் இன்பம்!

மொழியென்றால் என்னவென்றே புரிந்து கொள்ளா
முண்டங்கள் பலவாழும் நாட்டில் என்றும்
மொழியொன்றே உயிர்மூச்சாய் எண்ணி வாழ்ந்த
முனைவன்நம் பாவேந்தன் இன்றி ருந்தால்
விழிநீரைச் சுமந்திருப்பான்; விதைத்து வைத்த
விதையாவும் களையாக வளர்ந்த தென்றே
அழுதபடி நின்றிருப்பான்! அயலா னுக்கே
அடிமையா நாம் என்றெண்ணி நொந்து கொள்வான்!

கொலைவாளால் கொடியோரை வீழ்த்து தற்குக்
குகைப்புலியாய் எழச்சொன்ன அவனி ருந்தால்
சிலையாகப் போயிருப்பான்! மொழியும் நாடும்
சிதைந்திருக்கும் கோலத்தை இழிவைக் கண்டே
அலைபாயும் கடலாகும் அவனின் நெஞ்சம்!
அனலாகிக் கொழுந்துவிட்டே எரியும்; நாளும்
விலையாகும் இரண்டகத்தார் போக்கை யெண்ணி
வெந்துயரில் ஆழ்ந்திருக்கும் ஐயம் இல்லை.

கோயிலுக்குள் தமிழுண்டா? அமிழ்தம் போன்ற
குளிர்தமிழைப் போற்றிசெய்தால் தீட்டாம் என்னும்
தீயவர்கள் இந்நாட்டில் பெருமை யோடு
தெருக்களிலே உலவுகிறார் செருக்கி னோடு!
நேயமுடன் பாவேந்தன் தீட்டி வைத்த
நெருப்புவரிப் பாட்டெல்லாம் நெஞ்சில் நின்றே
ஆயவகைச் செயல்விளைந்தால் நம்மைச் சூழ்ந்த
அவலங்கள் காற்றாகப் பறந்தி டாதோ?

மொழிநலத்தைப் பேணுங்கள்! மொழியே வாழ்வில்
முதன்மையென எண்ணுங்கள்! காலத் தாலே
அழியாத இலக்கியங்கள் ஆய்ந்து கூறும்
அறிவார்ந்த கருத்துகளை ஏற்றுக் கொள்வீர்!
பழித்துரைக்கும் ஏடுகளை ஒதுக்கித் தள்ளிப்
பைந்தமிழர் பண்பாட்டை நிலைநி றுத்தி
விழலுக்கு நீர்பாய்ச்சி ஓய்ந்தி டாமல்
வினைநலமும் மனவளமும் இனிதே கொள்வீர்!

Scanned with CamScanner

இந்தியன் எங்கே ?

— பறம்பை அறிவன்

இந்தியன் என்பவன்
எங்கிருக்கிறான் ?
எனக்குப் புரியவில்லை.
பஞ்சாப் படுகொலையும்
அசாம் கொடுமையும்
அவனை அசைத்ததுண்டா ?
தமிழரின் தலை 'விதி' பற்றி
1. எண்ணி யிருப்பானா ?

எங்கே இருக்கிறான்
இந்தியன் என்பவன் ?
அவனைக் காண்பதற்கு
என்னுயிர் மூச்சும்
இணைந்த நெஞ்சும்
எண்ணித் துடிக்கிறது.
எங்கே அவன் எனக்
2. காணத் துடிக்கிறது !

மொழியால் பண்பால்
பலபட்டுக் கிடக்கின்ற
பரந்த மண்ணின்
'பாரதம்' பேசுவோரே,
உடைத்து நொறுக்கி
அதிகாரக் கடிவாளம்
கைப்பிடி கொண்டவரே !
விடுதலை வேட்கையை
விலைபேசி அடக்கிட
4. விரும்புதல் சரியாமோ ?

சலுகைதந்து ஒருவர்மீது
ஒருவரை ஏவிப்
படுகொலை புரிந்து
'பாரதம்' அருச்சிப்பதோ ?
5. இதுபயன் தனைத் தருவதுவோ ?

படைகளைக் கொண்டும்
தடைகளைச் செய்தும்
விடுதலை உணர்வுகளை
அடக்கிட முடியுமோ
6. அதனால் பாரதம் உருப்படுமோ ?

மகிழ்ச்சியான மண வாழ்க்கை அமைய வேண்டுமா? (புதிதாக மணந்தவர்களுக்கு)

உலூதியா வெர்ப் (கற்பிப்பியல் உயர்பட்டம் பெற்றவர்)
போரிசு மாலாகோவ் (மருத்துவத்தில் உயர்பட்டம் பெற்றவர்)

ஒரு குடும்பம் மகிழ்ச்சியாக இருப்பதற்குப் பொதுவான கருத்துரைகள் கூறுவது கடினம்தான்; அப்படிப்பட்ட கருத்துகள் எதுவும் இல்லைதான். இருப்பினும் பல்லாண்டு பட்டறிவைக் கொண்டு, குடும்பம் மற்றும் மண வாழ்க்கையின் அடிப்படைகளைக் கூற இயலும். அந்தப் பட்டறிவை உள்வாங்கிக்கொண்டால், சிலரின் வாழ்வில் ஏற்படும் "தவிர்க்க முடியாத" தவறுகளைத் தவிர்க்க முடியும்.

ஒருவர் யாரை மணந்து கொள்ளப் போகிறாரோ, அவரைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் திருமணத்திற்கு முன்பே நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

"ஒருவரையொருவர் அறிந்து கொள்ளுதல்" என்பது இரண்டு தரப்பினருக்கும் தொடர்புபட்ட செய்தியாகும். ஒருவரையொருவர் நேசிக்கும்போது, முதல் கட்டத்தில், 'காதலுக்குக் கண் இல்லை' என்பது உண்மைதான்; அப்பொழுது காதலன், காதலி இருவரும் ஒருவரையொருவர் அமைதியாகத் தெரிந்து கொள்ள வாய்ப்புக் கிட்டுவது இல்லை. எனினும், காதலின் தொடக்கக் கட்டத்தில் ஏற்படும் உணர்ச்சிப் புயலுக்கு இடையே, காதலர்கள் தங்களுடைய எதிர்காலத்தைப் பற்றிய பொறுப்பை மறந்து விடக் கூடாது.

(முன் பக்கத் தொடர்ச்சி)

உலகினை உறவு கொண்டிட விரும்பும்
தமிழனைப் பிரிவினை யாளன் என்பதா?
அவன் கெடுதலை யுற்றது
வந்தேறிகள் வாழ ஒப்பினதால்!
அவன் விடுதலை நோக்கிலே
பிழையினைக் காண்பது
7. சுரண்டலின் கூட்டமே!

தமிழனே உன்னை நீ
புரிந்திட மறுப்பதன்
பொருள்தான் புரியவில்லை.
உன் விடுதலை தன்னை நீ
விரும்பிடா விடினும்
உழைப்பவர் கூட்டம்
உன்னை விடுவிக்க முந்தியெழும்!
நீ முனைமுகம் நோக்கிச் செல்லு!
அதிலுன் முன்னேற்றம்
8. ஓங்கி வெல்லும்!

திருமணமானதும், முதலாண்டு வாழ்க்கை மிகவும் கடினமானதாக இருக்கலாம். புதிதாகத் திருமணமான இணையர்கள் பலரிடையே குணங்கள், பழக்கவழக்கங்கள், நன்மைகள் ஆகியவை மாறுபட்டவையாக இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள், முதலாவதாக உள்ளத்தால் ஒன்றுபடவேண்டும்; ஒருவரையொருவர் போதிய அளவு புரிந்துகொள்ள வேண்டும். வருங்காலத்தில் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு இது மிகத்தேவை.

ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும்போது ஏற்படும் இன்பத்துடன், வாழ்க்கையை யொட்டிய வழக்கமான பொறுப்புகளும், அன்றாட இடையூறுகளும், ஏற்படலாம். அப்படிப்பட்ட சமயங்களில் கணவன்-மனைவியர் அதனை எவ்வாறு எதிர்கொள்கின்றனர் என்பதை யொட்டித்தான் அவர்களுடைய வாழ்க்கை பெருமளவு அமைகிறது.

முரண்பாடுகளின் காரணம் :

இந்தக் கால கட்டத்தில் கணவன்-மனைவியரிடையே ஏற்படும் முரண்பாடுகள், வீட்டுச் செய்திகளைப் பற்றிய அவர்களுடைய போக்கைப் பொறுத்தவைதாம். வீட்டில் "ஆண்கள் செய்யும் வேலை", "பெண்கள் செய்யும் வேலை" என்று தொன்றுதொட்டுப் பாகுபாடு செய்யப்படும் வழக்கம் இன்றும் நடைமுறையில் இருக்கின்றது என்பது தெரிந்ததே. தொடக்க காலத்தில் இது போலான பாகுபாட்டுக்குக் காரணம் இருந்தது. அதிகப்படியான உடல் வலிமை தேவைப்பட்ட வேலைகளை ஆண்கள் செய்தனர். பெண்கள் உணவு செய்தனர்; குழந்தைகளை வளர்த்தனர்; வீட்டைத் தூய்மைப்படுத்தினர்; ஏனங்களைக் கழுவினர். ஆனால் வீடுகளில் ஆண்கள் செய்துவந்த கடினமான வேலைகள் இன்று மறைந்து விட்டன; ஆண்களுக்கான கடின வேலை எதுவும் இல்லை.

ஒருவரையொருவர் புரிந்து கொள்ளுதல்; உள்ளார்ந்த இணக்கம்; ஒருவர் மற்றவருக்குப் பிடிக்கும் வகையில் செயல்களைச் செய்ய விழைவது; எல்லா வகையிலும் கணவன்-மனைவியர் ஒருவருக்கொருவர் எப்போதும் உதவி செய்து கொள்வது ஆகிய இந்தக் குணங்கள், மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கை நடத்துவதற்கான அடிப்படையாகும். இதன்படி நடக்க முடிந்தால், நீங்கள் உங்கள் அன்புக்கு அழிவின்றிப் பல்லாண்டுகள் வாழலாம். அஃதாவது, உங்கள் வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாகவும், வெற்றி வாய்ப்புள்ளதாகவும் அமையும்.

இறந்த காலத்தைப் பற்றிப் பேசாமல் இருப்பது ஏமாற்றுதல் என்று பொருள் அன்று;. ஆனால், என்றோ மடிந்து ஒழிந்த ஒரு செய்தியை அல்லது செயலை அறவே பொருட்படுத்தாமல் இருக்கும் தன்மையாகும் அது. இஃது அனைவருக்கும் நல்லதாகும்.

திருமணமானதும், பல இளம் பெண்கள், தங்கள் கணவரிடம் நெருக்கமாகப் பழகும்போது அச்சப்படுகின்றனர். அவர்களுடைய கவலையும், அச்சமும், இயற்கையானதே. எனவே, மனைவியின் அச்சமும், கூச்சமும் போகும்படி, அன்பாகவும், திறமையாகவும் இளம் கணவன் நடந்துகொள்ள வேண்டும். கனிவான நடத்தை, காதலியின் அச்சத்தைப் போக்கும்; காலமெல்லாம் இன்பத்தைத் தரும்.

0

பாவாணர்ப் பத்து (இறுவாய்த் தொடை)

— பாவலர் இளஞ்சித்திரன்

(1) பாவால் எழுத முடியா தெனும்பேர் படைத்தவர்; எம்
நாவால் உரைத்தற் கியலா வினைமேல் நடந்தவரே!
சாவால் எமைப்பிரிந் தின்றுநான் காண்டுகள் தாண்டியவர்!
பூவால் மனப்பெற் றிருந்தபா வாணர் புகழ்மலையே!

(2) மலையே எனும்படி உள்ளத் துயர்ந்தெம் மனையிலெல்லாம்
நிலையாய் அமர்ந்த பெரியவர்! எங்கள் நினைவிலொரு
கலையாய்ச் சிரிப்பவர்! கள்ளம் அறியார்; கரவறியார்!
தலையாய்த் தமிழ்மகள் ஈன்றபா வாணர் தவப்பயனே!

(3) பயனே நினையா திருந்துதன் நாளில் பழந்தமிழ்ச்சீர்
நயனே நினைந்து பகலிர வாக நமக்கெனச்சொல்
வயலே இறங்கி உழுதவர்! ஆய்வு மழைபொழியும்
புயலே எனவெழுந் தார்த்தபா வாணர் புதுக்கொடையே!

(4) கொடையே எனத்தென் மொழிக்குக் கிடைத்த குரிசிலவர்
மடையே திறந்த புனல்போல் உரைகள் வழங்கியவர்!
நடையே பகையை நடுங்கிட வைக்கும்; நசுக்கும்! ஒரு
படையே எனப்போர் புரிந்தபா வாணர் படிப்பகமே!

(5) அகத்தொரு சின்னக் குழந்தை; மொழிப்பேர் அறிஞரவர்!
முகத்தினில் சிந்தனைத் தேக்கம்; குறையா முழுமுறுவல்!
பகட்டறி யாத இயல்நகைப் பேச்சு! பழகுதமிழ்
புகட்டிய ஆசான் எமதுபா வாணர் புலவரேறே!

(6) ஏறென நின்றொரு மூத்த முதலாய் இருந்ததமிழ்க்(கு)
ஊறென வந்த வடமொழி, ஆரிய உட்பகையைச்
சீறெனச் சீறி எழுந்துமெய் ஆய்வுகள் செய்தவற்றின்
வேரினைப் பேர்த்தே எரித்தபா வாணர் விரிகதிரே!

(7) கதிரே, முதல்தாய் மொழிதமிழ் என்றே காட்டுவித்துப்
புதிரே எனவென் றிருந்தபொய்க் கூற்றைப் புதைத்து,மொழி
முதிரா அறிவினர் செய்யுமே ஆய்வின் மூதுகெலும்பை
எதிரே இலாது முறித்தபா வாணர்க்(கு) எதிர்எவரே?

(8) எவரே இவர்செய் பணிக்கு நிகரே? எதுவிலையே!
சுவரே எனவிருந் தாரெம் தமிழர் துயில்கலையத்
தவறே இலாத தனித்தமிழ்க் கொள்கை தனையுயர்த்தி
இவரே பிடித்தார் மறைமலைத் தோன்றல் எனும்படியே!

(9) படியாத் தனத்தார்; சமற்கிரு தத்தைப் பரவிவரும்
அடியார் தமிழைப் பழிக்கும் திமிரை அடக்கியவர்
தடிநா, நரம்பை அறுத்த மறவர்! தமிழ்த்தலைவர்!
இடிபோல் எதிரிக் கிருந்தபா வாணர் எமக்கிசையே!

(10) இசைப்பெருஞ் சித்திரப் பாவல ரேறே இனிதெழுதி
நசைப்படப் போற்றிய ஆசிரி யர்!மொழி ஞாயிறவர்!
திசைப்படத் தென்தமிழ் நாட்டிய வேந்தர்! திரவிடத்தாய்
இசைப்பட நூற்கள் விரித்தபா வாணர் எமக் கொளியே!

மக்களைக் கொன்ற கொடியவர்கள்!

2 ரோசா

'நான் வாழ விரும்புகிறேன். வாழ்க்கை துறக்கம் போன்றது. ஆனால் வாழ்வது இயல்வதாயில்லை, நான் சாகப்போகிறேன். என் பெயர் ரோசா'.

இடிந்து குட்டிச் சுவராகியிருந்த ரோசுலாவ் நகரச் சிறையின் சுவர்களில் மேற்கண்ட வரிகள் காணப்பட்டன. 1943-இல் அந்த சோவியத்து நகரம் நாசிப் படைகளின் வசம் இருந்தது. அந்த நகரை இட்லரின் படைகள் காலி செய்து ஓடிய போது, சிறைச்சாலையிலுள்ள சிறையாளிகளோடு, அந்தச் சிறையையே கொளுத்தி விட்டுச் சென்றனர்.

யார் இந்த ரோசா ?

அவளுக்கு அகவை 19. கருமையான சுருட்டை முடி; பெரிய கண்கள், குழந்தை முகம். சிறிய உருவம்தான்; ஆனால் வாழ வேண்டுமென்ற ஆசை நிரம்பப் பெற்றவள். திறமை மிக்க அவள் கைகள் அழகழகான உடைகளை உருவாக்கக் கூடியவை. சிறையாளியாக அவள் பிடிபடுமுன்னர், ஒரு மின்திறவோராகப் பணி புரிந்து வந்தாள். துணிவு மிக்கவள்; நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் கொண்டவள். அவளது நிலைகுலையாத உள்ளத்தைக் கண்டு பிற சிறையாளிகள் துணிவு பெற்றனர். தப்பிப் பிழைத்தவர்கள் அவளைப் பற்றி அவ்வாறுதான் நினைவு கூர்கின்றனர். இன்றும் அவர்களது நினைவில் அவள் நீங்காத இடம் பெற்றுள்ளாள். அவள்தான், முன்னர் நாம் கூறிய வரிகளைச் சிறைச்சுவரில் தனது கொண்டை ஊசியினாலோ அல்லது தனது உகிரியி(நகத்தி)னாலோ பொறித்தவள்.

ஒரு நாள் பிற சிறையாளிகள் பலருடன் சுட்டுக் கொல்லப் படுவதற்காக ரோசாவும், சிறைச்சாலை முற்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டாள். சுடப்பட்டதில் அவள் வீழ்ந்தாள்; ஆனால் சாகவில்லை. குண்டு அவளது ஒரு கையையே பதம் பார்த்திருந்தது. அவள் மீது, செத்த பல உடல்களையும் போட்டு, வைக்கோலால் மூடி, கன்னெய்யை (பெட்ரோலை)த் தெளித்து, தீயிட்டனர் அந்த நாசி மாந்த அரக்கர்கள்.

அடியில் கிடந்த ரோசாவை தீ நாக்குகள் தீண்டவில்லை. அந்த அரக்கர்கள் சென்ற பின்னர், அவள் எப்படியோ ஊர்ந்து வந்து தன்னை விடுவித்துக் கொண்டாள். குண்டு வீச்சினால் சேதமடைந்திருந்த சிறைச் சுவர்களின் வழியே அவள் வெளியேறி விட்டாள்.

அடுத்த நாள் காலை, மீண்டும் அவளை அந்த அரக்கர்கள் பிடித்து விட்டனர். இரண்டாவது முறை சாவை எதிர்பார்த்து, அவள் சிறைக் கொட்டடியில் தவமிருந்தாள். இம்முறை செர்மானியர்கள் வேறு வகையாக நினைத்தனர். ரோசாவுக்கு

அந்த நகரைப் பற்றி நன்கு தெரியும். அவளிடமிருந்து பல செய்திகளை அறிய அவர்கள் எண்ணினர்.

எனவே, உசாவல் தொடங்கிற்று. மணல் நிரப்பப்பட்ட மதுப்புட்டில்களால் அவர்கள் அவளது நெஞ்சிலும் வயிற்றிலும் அடித்தனர். வலியால் அவள் துடித்தாளே அன்றி, ஒரு சொல்லும் பேசவில்லை. மூச்சுவிடத் திணறினாள். அவளது உணர்வு மங்கிற்று. மின்சாரக் கம்பிகளை அவளைச் சுற்றி இறுகக் கட்டி, அக் கம்பியைச் சூடேற்றினர்.

உசாவல் நடத்தியவர்களையே ரோசா சோர்வடையும்படி செய்தாள். அவள் வாயிலிருந்து ஒரு சொல்லும் வரவில்லை. மீண்டும் அவளைக் கொண்டு போய், தனிக் கொட்டடியில் அடைத்தனர். அவளை அவர்கள் கொலை விரும்பவில்லை. அவள் வலியுடனே தொடர்ந்து வாழ வேண்டுமென்று விரும்பினர்.

ரோசாவை விடுதலை செய்ய அவர்கள் தீர்மானித்தனர். அவள் நிலையைக் கண்டு மக்கள் அச்சமடைய வேண்டுமென்பதே அவர்களது நோக்கம்.

ஒரு தனி எந்திரத்தின் மூலம், ரோசாவின் தலையை ஓரளவு நசுக்கினர். அதன் மூலம் அவள் சாக மாட்டாள். ஆனால் சிந்தனை இழந்து, வெறும் நடமாடும் உயிரியாகக் காட்சியளிப்பாள். கந்தல் உடையுடன், உடலெல்லாம் திட்டுத் திட்டாக இரத்தம் உறைந்திருக்க, காலில் செருப்புமின்றி அவள் சிறையை விட்டு வெளியேறினாள்.

அவளது அழகிய முகத்தில் பித்தம்பிடித்த புன்முறுவலுடன் நகரின் தெருக்களில் சுற்றித் திரிந்தாள் அவள். தன்னைச் சுற்றியுள்ள பொருள்களை அவள் கண்ணால் கண்டாளே தவிர, அவை என்னவென்று அவளுக்குத் தெரியவில்லை; அவற்றின் பொருள் என்ன என்பதை அவளால் உணர முடியவில்லை. அவளது அறிவு பேதலித்து விட்டது தன்னைச் சுற்றி ஏற்படும் ஒவ்வோர் ஒலியும் அவளுக்கு அச்ச உணர்வையே ஏற்படுத்திற்று.

அவளைக் கண்டவர்கள், அவளைத் தங்கள் வீட்டிற்குக் கொண்டு சென்று, புதிய ஆடைகளைக் கொடுத்தனர். உணவு தந்தனர். ஆனால் அவளால் ஓரிடத்தில் இருக்க முடியவில்லை. சிந்தனைப் போக்கையே இழந்த அவள் நடந்து கொண்டே இருந்தாள்.

அவளெதிரே இரண்டு செர்மன் படையாளிகள் வந்தனர். ஒருவன் தனது துமுக்கியால் அவள் முதுகில் குத்தினான்; மற்றவன் அவளை 'முட்டாள்' என்று திட்டினான்.

அவள் வயல் வெளியில் ஓடினாள். அங்கிருந்த கண்ணி வெடியை மிதித்தாள். தீப்பிழம்புடன் ஒரு வெடியோசை. அதுவே அவளது முடிவு.

— ஏ. எம். எசு.

தூங்கடா தமிழா! தூங்கு!

—தமிழவேள்

தூங்கடா தமிழா! தூங்கு! நன்றாகத் தூங்கு! குறட்டை விட்டுத் தூங்கு!

எஃது எக்கேடு கெட்டுப் போனால் என்ன? அதுபற்றி உனக்கேன் கவலை?

"காக்கை குருவி எங்கள் சாதி!" என்று பாடினானே பாரதி! அது சரிதான்!

காக்கை குருவிக் கூட்டத்தைச் சுட்டுத் தள்ளினால், செத்த காக்கை குருவிக்காகச் சாகாதிருக்கும் காக்கை - குருவி கவலைப் படுவதுண்டா? இல்லையே!

காக்கை-குருவிகளைச் சுடுவதுபோலத்தான் சிங்களக் கயவர்கள் உன் இனந்தவரைச் சுட்டுத் தள்ளுகிறார்கள்! ஆனால் என்ன! அதுபற்றி உனக்கேன் கவலை? உன் மனைவி-மக்கள் சுடப்படவில்லையே; கவலையின்றித் தூங்கடா தமிழா! தூங்கு!

சிங்கள மண்ணெல்லாம் 'தமிழன்' குருதியால் சிவப்பாகிறது! தமிழனின் கண்கள் தோண்டப்படுகின்றன! தமிழன் அடித்துக் கொல்லப்படுகிறான்! அவனுடைய உடல் இறைச்சிக் கடையில் தொங்க விடப்படுகிறது! தமிழன் வீடுகள் கொளுத்தப்படுகின்றன! வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்படுகின்றன! தரைமட்டமாக்கப் படுகின்றன! அவனுடைய உடைமைகள், உரிமைகள் எல்லாம் பறிபோகின்றன!

போனால் என்ன? உன்னுடைய உடைமைகள் போகவில்லையல்லவா? உன்னுடைய குருதி சிந்தவில்லையல்லவா? உன்னுடைய கண்கள் தோண்டப்படவில்லையல்லவா? உன்னுடைய சுற்றத்தார் - நான்கு சுவர்களுக்குள் இருக்கும் சுற்றத்தார்-ஒருவரும் தம் தலையிலிருக்கும் ஒரு முடியைக்கூட இழக்கவில்லையல்லவா? பிறகு என்ன? தூங்கடா தமிழா! தூங்கு!

சிங்கள மண்ணில் - தமிழ் ஈழத்தில் - பிறந்துவிட்ட தமிழ் இளைஞர்கள்-பதினைன்குக்கும் முப்பதுக்கும் இடைப்பட்டோர் - சிங்களப்படையினரால் கண்காணாத இடத்துக்குக் கொண்டு செல்லப் பட்டால் உனக்கென்ன? அவர்களுடைய இடுப்பில் நச்சு ஊசியை ஏற்றினால்தான் உனக்கென்ன? அவர்கள் செயல் இழந்து நடைப் பிணங்கள்போல் ஆனால்தான் உனக்கென்ன? அவற்றையெல்லாம் உன் காதால் கூடக் கேட்காதே! உன் நெஞ்சில் நினைந்து வருந்தாதே! கண்ணையும்-காதையும் மூடிக்கொண்டு அறிவையும் மனத்தையும் அடக்கிக்கொண்டு, தூங்கடா தமிழா! தூங்கு!

சிங்களப் பேடிகள் தமிழ்ப் பெண்களைக் கற்பழிக்கிறார்களாமே! சிறுமிகளைக் கூட விடுவதில்லையாமே! கணவன் முன்னாலேயே மனைவியைக் கற்பழிக்கிறார்களாமே! எதிர்த்தால் சுடுகிறார்களாமே!

அழித்தால் என்ன ? சுட்டால் என்ன ? உன் தாயோ, தங்கையோ, மனைவியோ அந்த நிலைக்கு ஆளாகவில்லையல்லவா ? அப்படியிருக்க அதைப்பற்றி நீ எண்ணாதே ! பதறாதே ! துடிக்காதே! அழாதே! அமைதியாகத் தூங்கு! தூங்கடா தமிழா! தூங்கு!

உன் இனம் சிங்கள மண்ணில் அழிந்து கொண்டிருப்பதைப் பற்றி, நீ தூங்குகிறபோது கனவில் கூடக் கருதாதே !

உன் கனவில் கட்சித் தலைவர்கள் வருவார்களே ! கோயில் குடமுழுக்குக் கூட்டம் வருமே ! திரைப்பட நடிக-நடிகைகள் வருவார்களே ! அது போதும் !

கொஞ்சம் மதுவையும் அருந்தி விட்டுத் தூங்கு ! இரவு பகல் எப்போதும், எங்கேயும்தான் அது இப்போது கிடைக்கிறதே ! கொஞ்சம் என்ன; நிறையவே குடித்து விட்டுத் தூங்கடா தமிழா ! தூங்கு !

சிங்கள நாட்டில் பேருந்தில் போகிற தமிழ்ப் பயணிகளை இறக்கி வரிசையாக நிற்க வைத்துப் பின்னால் இருந்து சுடுகிறான் சிங்கள வெறியன் !

தமிழ் இளைஞர்களைப் படகில் ஏற்றிக் கடலில் இழுத்துச்சென்று -அவர்கள் எல்லோரும் விடுதலைப் புலிகள் - தமிழகத்துக்குத் தப்பியோடப் பார்த்தவர் என்று கூறி அவர்களைச் சுட்டுத் தள்ளுகிறான் சிங்களவன், என்ற செய்தி நாள்தோறும் வருகிறதே ! அதைப் பற்றியெல்லாம் சிறிதும் சிந்தியாமல் தூங்கடா தமிழா ! தூங்கு !

உனக்குத் தூக்கம்தான் பெரிது ! உன் வயிறுதான் பெரிது ! உன் குடும்பம்தான் பெரிது! உனக்கு இனப்பற்று எதற்கு? மொழிப் பற்று எதற்கு ? நாட்டுப் பற்றுதான் எதற்கு ?

"பற்றே பிறப்புண்டாக்கும்! தாண்டவக்கோனே-அதைப்
பற்றறுத்து அழித்துவிடு தாண்டவக் கோனே"

என்பது சித்தர் பாட்டல்லவா ? ஆகவே பற்றற்றுத் தூங்கடா தமிழா! தூங்கு !

ஒரு நாயை அடித்துக் கொன்றால், அதனைப் பார்த்துக்கொண்டிருக்கும் வேறொரு நாய் கவலைப்படுகிறதா என்ன ? தன் தலைவனுக்கு நல்ல அடிமையாக, அவன் எச்சில் சோற்றைத் தின்று கொண்டு வாலை ஆட்டிக்கொண்டு மகிழ்ச்சியாக இருக்கிறது அல்லவா? அந்த நாய்க்கும் உனக்கும் என்ன வேறுபாடு? ஒன்றுமில்லை !

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பது தமிழ் மறையல்லவா ? நாயும் நீயும் பிறப்பால் ஒன்றுதானே ! பிறப்பால் மட்டுமென்ன குணத்தாலும் ஒன்றுதானே ? உன்னைப்போன்று தமிழ் பேசும் தமிழர்கள் உலகத்தில் எங்கே எப்படிக் கிடந்து அழு

தால் என்ன? அழிந்தால் என்ன? கவலையின்றித் தூங்கடா தமிழா! தூங்கு!

தனக்கு அடங்கி நடக்காத நாய் என்றால் எந்தத் தலைவன் அதற்குச் சோறு போட்டு வைத்திருப்பான்? தமிழர்கள் எல்லோரையும் நாய்களாக கத்தானே எண்ணுகிறது சிங்கள அரசு! அதனால அந்த அரசு என்ன செய்கிறது தெரியுமா?

சிறையில் அடைத்து வைத்திருக்கும் தமிழர்களை விடுதலை செய்து விடுகிறதாம்; அவர்களைச் சிறையிலிருந்து வெளியே வந்து சிறிது தூரம் சென்றதும் சிங்களப்படை அவர்களை மடக்கி எங்கோ கொண்டு செல்கிறதாம்! அங்கே அவர்களைச் சுட்டுத்தள்ளி விடுகிறதாம்! என்ற செய்தியை நீ எங்கே படிக்கப்போகிறாய்?

நீ படிக்கும் கிசுகிசு இதழ்களிலும், கிண்டல் இதழ்களிலும் இந்தச் செய்தி வந்திருக்காதே! செயவர்த்தனேவைப் பாராட்டும் கட்டுரை அல்லவா வந்திருக்கும்? எனவே உனக்கு உண்மை எங்கே தெரியப்போகிறது?

உண்மையைத் தெரிந்துகொள்ளாமலேயே, கள் மயக்கத்திலும், காம மயக்கத்திலும், அறியாமை இருளிலும், அடிமை இருளிலும் அழுந்திக் கிடந்து தூங்கடா தமிழா! தூங்கு! நன்றாகத் தூங்கு!

உன்னுடைய நாட்டுக்குத் தாய்த் தமிழகத்துக்கு, சிங்கள நாட்டிலிருந்து பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் - ஆண்களும் - பெண்களும், மாணவர்களும், குழந்தைகளுமாக வந்திருக்கிறார்களே! அவர்களைக் கவனிப்பதற்காகக் கூட நீ கண் விழிக்காதே!

அவர்கள் பட்டினியால் செத்தால்தான் என்ன? உடுக்க உடையின்றி இருக்க இடமின்றித் தவித்தால்தான் என்ன? கல்லூரிப் படிப்புக்குக்கட்டப் பணம் இன்றி வருந்தினால்தான் என்ன? அவர்களுக்காக நீ ஒன்றும் செய்யாதே!

வழக்கம்போல் உன் செலவுகளைச் செய்! கோயில் குடமுழுக்கு, கோபுரச் சீரமைப்பு, வெள்ளித்தேர், தங்கத்தேர் திருவிழாக்கள் பூப்பல்லக்குகள், வாண வேடிக்கைகள் ஊர்வலங்கள் இவற்றில் ஒன்றைக்கூடக் குறைக்காதே!

ஆரவாரமாகக் கொண்டாடும் கட்சிக் கூட்டங்கள், மாநாடுகள், கண்ணைப் பறிக்கும் வண்ண விளக்குக் காட்சிகள் ஒன்றையும் குறைக்காதே!

வேலைக்கு ஒரு படம், நாளைக்கு நான்கு படம் என்று பார்த்த படத்தையே திரும்பத் திரும்பப் பார்த்துக் களிக்கும் உன் களியாட்டச்செலவுகளைக் குறைக்கவே குறைக்காதே!

இந்தச் செலவுகளையெல்லாம் குறைத்து, அந்த ஏதிலித் தமிழ்க் கூட்டத்தை வாழவைக்காதே! வாழவைக்க எண்ணாதே!

முதலில் நீ விழித்துக் கொண்டால் அல்லவா எண்ணுவதற்கு? தூங்கடா தமிழா! தூங்கு! நன்றாகத் தூங்கு! 0

Scanned with CamScanner

ஓர் ஒப்பற்ற பாவலராகத் தமிழுக்கும் தமிழினத்துக்கும் இடைத்திருக்கும் தங்களின் எழுத்துகளால் வாழ்த்துப் பெறுவதை ஓர் ஊதியமாகவும், பெரும் பேறாகவும் கருதுகிறேன். தங்களின் அரிய நேரத்தை இவ்வெளியேனுக்காகவும் ஒதுக்கிய தங்கள் அன்பு உள்ளத்திற்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனி, ஆசிரிய உரையைப்பற்றிச் சில கருத்துகள்.

செ. சொ. பி. வரலாற்றைப்பற்றிய கூற்றுகள் அனைத்தும் உண்மையானவையே! 'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பாரி லானும் கெடும்' என்னும் குறளுக்கு ஏற்ப தங்கள் உரை இடித்துரைக்கும் உரையாகவே அமைந்துள்ளது. செ. சொ. பி. வரலாற்றைத் தென்மொழியிலிருந்து தொடங்கி வரைய வேண்டியது இன்றியமையாததே! அடுத்தது 'தமிழ்நிலத்'தில் பாவலரேறு என்னும் பட்டம் குறித்துப் பல வரிகள் எழுதியுள்ளீர்கள். அப்பட்டமும் பெரும் பாவலராகிய தங்கட்குச் சிறுமையானதே!

ஒன்றுமறியாதவர்களும், புலமையில்லாதவர்களும் பல பட்டங்கள் சூட்டிக்கொண்டு உலாவரும் இந்நாளில், உண்மையாகவே பெரும் பாவலரும், இலக்கியப் படைப்பாளியும், பாவுணர்வு இயற்கையாக ஊறிவரும் நெஞ்சக்களம் அமைந்தவருமான தங்களுக்குத் தமிழ்கூறும் நல்லுலகு அரிய இனினும் பெரிய பட்டமொன்று சூட்ட வேண்டும் என்று விழைகின்றேன்.

அண்மையில் இலக்கணப்புலவர் திரு. த. ச. தமிழன் அவர்களைக் கண்டு உரையாடியபோது இங்குள்ள தமிழன்பர்களிடம் அவர் கூறியவை பின்வருமாறு:

'பாரதியைக்காட்டிலும் பத்துமடங்கு உணர்வோட்டத்தோடு பாடிய பாவேந்தரின் பாடல்கள் வாள் வீச்சுக்கு ஒப்பானவை. பாவேந்தருக்குப்பின் இனம், மொழி என்னும் பொருள்களைப் பற்றி ஆழமாகவும் விரிவாகவும், இயற்கையாய் ஊற்றெடுக்கும் பாவுணர்வோடும் பாடிவரும் பாவலரேறு அவர்களின் பாடல்கள் புலியின் பாய்ச்சலுக்கு ஒப்பானவை. அவருடைய புலமைத் தகுதியையும் பாவன்மையையும் பற்றி இருவேறு கருத்துகள் இல்'.

இவ்வாறு தங்களுக்கென்று தனி மதிப்பு வைத்திருக்கும் பாவலர்கள் இருக்கும் வரையில், யாரோ எதையோ சொன்னார்கள் என்பதற்காக எள்ளத்துணையும் எள்ளின் மூக்கத்துணையும் தாங்கள் கவல வேண்டுவதில்லை. தங்கள் தமிழ்ப்பணி சிறப்பதாக! நன்றி, வணக்கம்! அன்பன், —அருள். செல்லத்துரை, திருச்சி-8.

0 : ιϵ1 : ஐயா, வணக்கம். இம் மாதத் 'தென்மொழி' இதழ் வந்தது; படித்தேன்; செய்தி அறிந்தேன். புல்லரிடம் போற்றுதல் எதிர்பார்க்க இயலுமா? இருண்ட காலமிது. இதில் செருக்குற்ற சிறுமைகட்கே முதலிடம். செருக்கற்ற செய்பணியாளர்கட்குப் பல்லாற்றானும் தொல்லை தரும் காலமிதுவென அமைதி கொள்க!

தற்குறிகளே மண்டிய மண் மண்டிலமாயிற்றே இது. இதைத் திருத்த இயலாது; அதுவாய்த் திருந்தினால் அன்றி! துறைதோறும் சீர்கேடுகள் மண்டிக் கிடக்கின்றன. சிறுமதியாளர்கள் உலா வருகின்றனர். ஊதிப் பெருக்கின்றனர். ஊழ்வினை இதுவென்கின்றனர். ஆரியர்க்கு அடிமையான திராவிடம் பூரியர்க்கே பயன்படும்; பூந்தமிழுக்குப் பயன்படாது. நற்றமிழ் மொழியை நாளும் அழிப்பதே தொழிலாகக் கொண்டவர்கட்கே அரசுக்காப்பு! அஃதழிவதியல்பே; அறமுமஃதே! இத்துணைக் கேட்டிற்கும் வழிவகுத்தவர்கள் மக்களேயன்றி வேறுயாருமிலர். ஆனால், அதை உணர்ந்தாலும் திருந்தாத பிறவிகளாகவே போய்விட்ட இத்தமிழகத்தை நினைக்கவே நெஞ்சு சுடுகிறது. இந் நிலையில் எவ்வகையானும் தங்களைப் போன்றோர் நெஞ்சத் துயரைத் துடைக்க

(தொடர்ச்சி அட்டை 4-ஆம் பக்கம்

Scanned with CamScanner

இயலாதுதான்! இருப்பினும் அனைத்தையும் பொறுத்தாற்றிக் கொள்வதே நல்லது. இப்படிக்கு, உண்மையுள்ள,

— சி. நா. செந்தமிழ்ச்செல்வன், வேங்கைவாடி.

0 : 1082: தமிழினக் காவலரே, தலைதாழ் வணக்கம். 7-5-85-ஆம் நாள், தாங்கள் கல்பாக்கம் வருகை தந்து சிந்தனையாளர் பேரவையில் 'திருக்குறள் ஓர் இன நல நூல்' என்ற பொருள்பற்றியும், கலை அறிவியல் மன்ற வேனில் விழாவில், 'மாந்தனும் மொழியும்' என்ற தலைப்பிலும், அறியதோர் அறிவு விருந்து அளித்ததை உண்டு மகிழும், வாய்ப்புக் கிடைத்ததை எண்ணிப் பெருமையும், பூரிப்பும் பெறுகின்றோம். அன்று இரவு எங்கள் இல்லத்தில் தாங்கள் தேநீர் அருந்த எங்களுக்கு வாய்ப்பு அளித்ததை நினைந்து நினைந்து மகிழ்கின்றோம். அதைப் பெரும்பேறாகப் போற்றுகின்றோம். நனி நன்றி நவில்கின்றோம்.

திருவள்ளுவர் திருவுருவம் பற்றித் தாங்கள் தென்மொழியில் (சுவடி 21 ஓலை 5) தெரிவித்து உள்ள கருத்துகள் பற்றி இரவு விருந்தினர் இல்லத்தில் கலந்துரையாடினோம். அதுபற்றி மடல் எழுதி அனுப்புங்கள் என்று கூறினீர்கள். எனவே, இந்த மடல். தாங்கள் தெரிவித்துள்ள இலக்கணப்படி அமைந்த திருவள்ளுவர் திருவுருவப்படம் குறளகத்தில் இருக்கிறது. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் வைக்கப்பட்டுள்ள படம். அதை வரைந்தவர் ஓவியர் மாதவன் அவர்களின் அடியர் நடராசன் அவர்கள். இதை ஒளிப்படம் (Photo) எடுத்துத் தென்மொழியில் வெளியிட்டுத் தங்கள் கருத்தையும் எழுதுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

'பிராட்வே' பேருந்து நிலையத்திற்குள் பேருந்து நுழையும் சாலையில் வலப்புறம் ஆவின் நிலையம் இருக்கிறது. அதற்கு அடுத்துக் குறளகத்தில் மாடிக்குச் செல்லும் வாயில் உள்ளது. வாயில் சுவரில் இந்தப் படம் வைக்கப்பட்டிருக்கிறது. இதை ஒளிப்படம் எடுக்குமாறு சென்னையில் பணிபுரியும் என் மகன் இளங்கோவிடமும் கூறியுள்ளேன்.

இந்தப்படம் தங்களுக்கு நிறைவு தரும்வகையில் அமையும் என்று நம்புகின்றேன். இப்பொழுதுள்ள திருவள்ளுவர் திருவுருவங்கள் பற்றித் தாங்கள் தெரிவித்துள்ள கருத்துகள் முற்றிலும் சரியே. இப்பொழுது தென்மொழியில் வெளியிட்டுள்ள படம் எங்களுக்கு உடன்பாடாக இல்லை. திருவள்ளுவர் என்று எழுதித்தான் தெரிவித்தல் வேண்டும். தங்கள் தொண்டுக்கு என்றும் துணை நிற்போம் என்று உறுதி கூறுகின்றேன்.

தங்கள் அன்பு மறவா,— வ. வேம்பையன், கல்பாக்கம்

0: 1083: ஐய, தென்மொழி தமிழ்ச்சிட்டு இதழ்கள் இனிமலரா என அறிந்தேன். இது வெறும் பொருட்சுமையால் மட்டும் தாங்கள் எடுத்த முடிவாய் இருக்கும் என நான் நினைக்கவில்லை; கடந்த கால்நூற்றாண்டுக் காலமாகக் காணாத பொருட்சுமையையா புதிதாகத் தற்போது கண்டுவிடப்போகின்றீர்கள்! வேறு காரணியம் இருக்குமெனத் திடமாக நம்புகின்றேன். தற்போதைய தலையாய பணி உ.த.மு.க.வை உரம்பெறச் செய்வது; அதன் குரலான 'தமிழ்நில'த்தை அணுக்கக் கவனத்தோடு ஒலிக்க வைப்பது—இந்த நோக்கத்தில்தான் தாங்கள் அந்த முடிவை எடுத்திருப்பீர்கள். எடுத்திருக்க வேண்டும் என நினைக்கின்றேன்.

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம் பார்க்க)